விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து எட்டு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 24 திங்கட்கிழமை (08.01.2018) · தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## யாழ்.அத்தியடிப் பகுதியில்
## காரில் வந்தவர்களை மறித்து வாள்வெட்டுத் தாக்குதல்
### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி பகுதியில் காரில் வந்தவர்களை வழிமறித்து வாள்வெட்டு குழுவினர் தாக்குதல் மேற்கொண்டதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 8 மணியளவில் அத்தியடி வீதியால் இரு இளைஞர்கள் காரில் வந்துள்ளனர். 28

## மின்சாரம் தாக்கியதில் மாணவன் பலி
### பட்டம் ஏற்றிய போது பட்டத்தில் பொருத்தியிருந்த மின்சாரவயர் மின்கம்பத்துடன் மோதியதில் விபரீதம்
### புத்தூரில் நேற்றுமாலை சோகம்



(யாழ்ப்பாணம்)

பட்டம் ஏற்றிய போது மின்சாரம் தாக்கியதில் உயர் தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவன் உயிரிழந்த சம்பவம் ஒன்று சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புத்தூர் மீசாலை வீதியில் பட்டம் ஏற்றிக்கொண்டிருந்தபோது பட்டத்திற்கு பொருத்தியிருந்த மின்சார வயர் வீதியால் சென்ற 27

## தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி உயிர் நீத்த
# மாவீரர்களை பயன்படுத்தி அரசியல் செய்யும் கூட்டமைப்பு
## முன்னாள் போராளியான அன்னலட்சுமி தலைமையிலான சுயேட்சைக் குழு குற்றச்சாட்டு





(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி உயிர் நீத்த மாவீரர்களையும் முன்னாள் போராளிகளையும் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நடத்துவதாக முன்னாள் போராளியான அன்னலட்சுமி தலைமையிலான சுயேட்சைக் குழு குற்றம் சுமத்தியுள்ளது. (27ஆம் பக்கம் பார்க்க)

## பிணைமுறி தொடர்பான விவாதத்திற்கு தயார்
### பிரதமர் ரணில்



(கொழும்பு)

பிணைமுறி அறிக்கை தொடர்பில் பாராளுமன்ற விவாதமொன்றை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 27

## தேர்தல் தொடர்பில் 114 பேர் கைது

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து 103 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதில் 33 முறைப்பாடுகள் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டமை தொடர்பிலும் 68 முறைப்பாடுகள் தேர்தல் தொடர்பான வெவ்வேறு முறைப்பாடுகளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 27

## சமூக வலைத்தளங்களை
## தனிநபர், நிறுவனங்களுக்கு எதிராக பயன்படுத்தினால் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சமூகவலைத்தளங்களில் தனிநபருக்கு எதிராகவோ அல்லது நிறுவனங்களுக்கு எதிராகவோ செயற்படுவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது.

அண்மைக்காலமாக முகப்புத்தகம் உள்ளிட்ட அனைத்து சமூக வலைத்தளங்களிலும் ஒருவருக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு அநாகரிகமான இடுகைகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

குறிப்பாக, ஆபாச நடிகர் நடிகைகளின் உடலையும், பழி 27

### கொழும்பில் பிறந்துவளர்ந்த சுமந்திரனுக்கு
## தமிழரின் போராட்டம், வலி பற்றி என்ன தெரியும்? சுரேஸ் காட்டம்



(வவுனியா)

போராட்டமும் அதன் வலியும் தெரியாத சுமந்திரனே தமிழர்களுக்கு விரோதமாக செயற்படுகின்றார் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 27

## ஊடகங்களை எதிர்த்து தேர்தலில் வெல்வோம்
### சுமந்திரன் எம்.பி. சவால்

(யாழ்ப்பாணம்)

ஊடகங்களைப் பகைத்து தேர்தலில் வெல்ல முடியாதா? அவற்றை எதிர்த்து தேர்தலில் வெல்ல முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாநகர சபைத் தேர் 27

## தேர்தலுக்கு தடை ஏற்படுமானால் அரச நிறுவனத்தையே மாற்றுவோம்
### தேர்தல் ஆணைக்குழு அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைக்கு ஒரு அரச நிறுவனத்தினால் இடைஞ்சல் ஏற்படுமாயின், வேறு அரச நிறுவனமொன்றினால் அந் நடவடிக்கையை முன்னெடுக்கத் தேவையான விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் என அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். காலி மாவட்ட செயலகத்தில் நேற்று 27

## தருமபுர பொலிஸ் பிரிவில்
## கசிப்பு கடத்திய இருவர் மோட்டார் சைக்கிளுடன் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் 12 மணி நேரத்திற்குள் மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்ட 20 லீற்றர் கசிப்பையும், கசிப்புக் கடத்திச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப் பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் அதனைக் கொண்டு சென்ற 2 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் 27

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் தீர்வு என்ற மாயையை காண்பித்து வாக்குகளைச் சூறையாடும் கூட்டமைப்பினர்

## சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு

சுமந்திரனின் கருத்தை கேட்டால் அழுவதா சிரிப்பதா என தெரியவில்லை என தெரிவித்த சட்டத்தரணி சுகாஸ் அரசியல் தீர்வு என்ற மாஜையை காண்பித்து தமிழ் மக்களுடைய வாக்குகளைச் சூறையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்புக்கான மக்களின் ஆணை சரிந்துவிட்டது என்ற செய்தி வருமாக இருந்தால் புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற முடியாது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒரு நிகழ்வில் தெரிவித்தார். இந்தக் கருத்துத் தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சட்டத்தரணி சுகாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவிருக்கும் தேர்தல் உள்ளூராட்சி தேர்தல். இதில் உரிமைகளை பற்றி கதைக்காதீர்கள் என கூறிவிட்டு அவர்களே இப்போது தீர்வை பற்றி பேசுகிறார்கள். இது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வளர்ச்சியை கண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆடிப்போய் இருக்கிறது என்றும் கூட்டமைப்புக்கு ஒரு தெளிவான கொள்கை இல்லை என்பதை காட்டுகிறது.

இந்த தீர்வை யார் ஏற்றது? இந்த இடைக்கால அறிக்கையில் சமஷ்டி இல்லை, வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை. என்றால் இந்த தீர்வு வருவதும் பார்க்க வராமல் விடுவது சிறந்தது. சுமந்திரனின் இந்த கருத்து தெளிவாக புலப்படுத்துவது என்னவெனில் தாம் தோற்று விடுவோம் என பயப்படுகிறார்கள். அதனால் தான் தீர்வு என்ற மாயையை காட்டி மக்களின் வாக்குகளை சூறையாட பார்க்கிறார்கள். மக்களை இனியும் ஏமாற்ற முடியாது. மக்கள் மாற்றத்துக்கான பயணத்துக்கு தயாராகிவிட்டார்கள். த தே கூ வீழ்ச்சி த.தே.ம. முன்னணியின் எழுச்சி என்பதை காட்டுகிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கொள்கை இல்லை. ஒற்றுமை இல்லை. பதவிகளுக்கு தான் அவர்கள் கூட்டாக இருக்கிறார்கள். அவர்களுக்குள் பிளவு வந்தால் அவர்களை ரணில் ஒன்று படுத்த வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். தலைவரால் உருவாக்கப்பட்ட இந்த கூட்டமைப்பு தற்போது அரசாங்கத்துக்கு விலைபோய்விட்டார்கள்.

எனவே மக்கள் விளிப்படைந்து விட்டார்கள். சின்னங்களை பார்க்காமல் கொள்கைகளை பார்த்து வாக்களிப்பார்கள் என நாம் நம்புகிறோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**விற்பனைக்கு**
உயர்ரக 30 நாட்கள் நிரம்பிய சுப்பர் வண் (Super One) ரக மிளகாய் நாற்று உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
0772718292, 0778814228
(2319)

## மணிவிழா வாழ்த்து

யா/அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர்

திருமதி அமிர்தகௌரி சண்முகம் (விசேட பயிற்சி-கணிதம்)



சேவை விபரம்

முதல் நியமனம் 17.08.1988-24.02.1991 யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி
25.02.1991-28.02.1993-பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.03.1993-24.05.2005-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
25.05.2005-12.07.2013-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
13.07.2013-08.01.2018-யா/அத்தியார் இந்துக் கல்லூரி

அமிர்தத்தின் இருப்பிடமான அமிர்த கௌரியே,
அமிர்தமாய் கணிதம் தனைப் புகட்டி அருமையான பணி செய்து
அகவை அறுபதை எட்டி நிற்கின்றீர்கள்
உம் பணியை வியந்து நயந்து போற்றுகின்றோம்
அவள் அருளால் ஒளியுடன் வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes

(2281)

வாழ்த்துவோர்:-யா/அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர், கல்விசாரா பணியாளர்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னராசா இராசையா

(சித்தப்பா பேக்கரி உரிமையாளர்)

மலர்வு:- 07.10.1958

உதிர்வு:- 08.01.2006

ஆண்டுகள் ஓடி மறையும்
உம் அன்பு முகம் மறைந்திடுமா?
காலங்கள் கடந்து போகும்
உம் நினைவுகள் விலகிடுமா?
தேற்ற ஆளின்றித் தவிக்கிறோம்
உம் சிரித்த முகம் காண ஏங்கி!

(சு-115)

V.M வீதி,
சின்னப்பிள்ளையார் கோவிலடி,
பருத்தித்துறை

ஆறாத்துயரில்,
மனைவி, மகன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

# ICT

அகில இலங்கை ரீதியாக எம் மாணவர்களின் உயர் பெறுபேறுகள்



R.Adithya
மாவட்ட நிலை-06, கலை-2AC
(English Medium) ICT-A



K.Mathuri
மாவட்ட நிலை-08, கலை-2AS
(English Medium) ICT-A



S.Tharmika
மாவட்டம்-05, Bio Tech-2AB, ICT-B



K.Kasthury
மாவட்டம்-06, Bio Tech-ABC, ICT-C



M.Madhusha
மாவட்டம்-10, (மட்டக்களப்பு) கணிதப்பிரிவு-BCS, ICT-B



R.Mathusha
மாவட்டம்-45, கலை-ABS, (English Medium) ICT-B



G.Thajanuka
மாவட்டம்-95, கலை-2BC, (English Medium) ICT-B



P.Jaanusan
மாவட்டம்-19, E-Tech-B2C, ICT-C

ICT பாடத்தில் C.தரசித்தி பெற்றோர்:- S.Elilan (மாவட்டம்-7, கிளி), S.Rakuvarma, C.JadeRoy, R.Pirasanth, S.Denisan, A.Arjin, S.Pravakshan, K.Sulaxsan, R.Kopirajh, M.Makinthan, S.Nithun, P.Lathusan, S.Priyanka, S.Elakkiya, M.Disothan, R.Priyanka, E.Viththahee, V.Lishajini, M.Pinthujan, K.Pamimathan.

ஏனைய "S" தர சித்தி பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

T.யதுபாலதரன் Bsc
0773256855/ 0778448002

லைசியம் உயர்கல்லூரி–மீசாலை
ஞானோதயா அக்கடமி–சாவகச்சேரி
(1153)
சீமா உயர்கல்வி நிலையம் (புத்தூர் சந்தி-மீசாலை)

உலகத் தமிழர் மத்தியில் பிரபல்யமான

## "செல்பி அக்கம் பக்கம்"



நாடகத் தொடரை ஐரோப்பிய நாட்டில் இயக்கியவர்களின் இன்னும் பல படைப்புக்கள் ஊடாக

வெளிநாட்டில் இருக்கும் நம்மவர்களின்
வாழ்வையும் வலியையும்
அவர்கள் நிலைமைகளையும் நகைச்சுவையுடன்
பார்த்து மகிழுங்கள்.

வெளிநாட்டில் படமாக்கப்பட்ட
நாடகத்தொடர்களையும், குறும்படங்களையும்,
திரைப்படங்களையும்
பார்க்க வேண்டிய முகவரிகள்

(2235)

Facebook Page - Like செய்து மற்றும்
YouTube ஐ Subscribe செய்து இரண்டு
முகவரிகள் ஊடாக பார்க்க முடியும்
முகவரி பெயர்:Manmathan Basky-
www.Baskymanmathan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் உரிமைகளை அடகுவைக்கப் போவதில்லை

# அரசியல் பிழைப்புக்காக வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து நான் பேசமாட்டேன்

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

அரசியல் பிழைப்புக்காக வடக்கு- கிழக்கு இணைப்பு குறித்து பேச வேண்டிய தேவை தமக்கு இல்லையெனவும் முஸ்லிம்களின் உரிமைகளை நாங்கள் ஒருபோதும் அடகு வைக்கப் போவதில்லை எனவும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நிந்தவூரில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கையும், கிழக்கையும் இணைப்பதற்கு இரகசியமாக ஒப்பந்தம் செய்ததாக பிரசாரம் செய்யப்படுகின்றது.

இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று பேசி வந்த முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் இப்போது மாற்றிப் பேசுகின்றார்.

இந்தக் காலகட்டத்தில் நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி பேசுவதில் நியாயம் இல்லை.

அரசியல் பிழைப்புக்காக தினேஷ்குணவர்த்தன, விமல் வீரவன்ச போன்றோர் வட - கிழக்கு இணைப்பு தொடர்பாக பேசலாம்.

சில முஸ்லிம் தலைமைகளுக்கும் அவர்களைப் போன்று வடக்கு-கிழக்கு இணைப்பை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தவேண்டும் என்ற நிலையில் அவர்களது ஆதரவுத்தளம் உள்ளது.

வட - கிழக்கு இணைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் பகிரங்கமாக எதையும் பேசப்போவதில்லை.

அப்படியொரு விடயம் நடந்தால் தமது கட்சி அதைப் பற்றி பேசும்.



அவ்வாறில்லாமல், தங்களது அரசியலுக்காக தமிழர்களின் அபிலாஷைகளில் மண் அள்ளிப்போடவேண்டிய தேவை தமக்கு இல்லை என ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் அமையாமல் எதுவும் நடக்கப் போவதில்லை. முஸ்லிம்களின் உரிமைகளை நாங்கள் ஒருபோதும் அடகுவைக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிணைமுறி மோசடி தொடர்பிலான ஆணைக்குழு மிகவும் நேர்மையான முறையில் செயற்பட்டுள்ளது

## அமைச்சர் சரத் அமுனுகம நற்சான்றிதழ்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலான ஆணைக்குழு மிகவும் நேர்மையான முறையில் செயற்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போது அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"முறி மோசடி தொடர்பிலான ஆணைக்குழு மிகவும் நேர்மையான முறையில் செயற்பட்டதாக அனைவராலும் நம்பப்படுகின்றது.

அத்துடன், அண்மைய காலத்தில் நியமிக்கப்பட்ட மிகவும் சிறந்த ஆணைக் குழுவாக அதை கருதுகிறேன். இதேவேளை, எதிர்காலத்தில் புதிதாக அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது" எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த 31 ஆம் திகதி கையளித்தது. இந்நிலையில் இதுகுறித்து பலரும் காரசாரமாக விமர்சித்து வருவதோடு, தமது நிலைப்பாட்டையும் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அகிலதாஸின் மணிவிழா நிகழ்வின் பதிவுகள்
















(படங்கள்:-பொ.சோபிகா)

யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸின் மணிவிழா நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இல.37, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்து சாதன ஆசிரியர் பிரம்மஸ்ரீ தியாக மயூரகிரிக் குருக்கள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை ம.ஜெரோம் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கியிருந்தனர்.

நாயகன் நடந்து வந்த பாதை எனும் தலைப்பில் மணி விழாக்குழு செயலாளர் க.அருந்தவபாலன் அறிமுகவுரை வழங்கியதுடன் வாழ்த்துரைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை சிரேஷ்ட பேராசிரியர் எஸ். சிறிசற்குணராசா ஆகியோர் வழங்கியிருந்தனர். பாராட்டுரைகளை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராசா, நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் கலாநிதி செ.சேதுராசா, யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ம.ஞானசம்பந்தன், அதிபர் ப.கணேசன், டாக்டர் அமரசிங்கம் சசிக்குமார் ஆகியோர் வழங்கியிருந்தனர். 'அகிலதீபம்" மணிவிழா மலரை திருமதி அருணாசலம் கமலதாசன் குமுதினி (சுவிஸ்) வெளியிட்டு வைத்திருந்தார். மலர் முன்வைப்புரையை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் விழா நாயகன் அகிலதாஸ் தம்பதியரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (இ-9)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிட்னி பிங் டெஸ்ட் 4ம் நாள்

## சதமடித்து பட்டையைக் கிளப்பினர் மார்ஸ் சகோதரர்கள்

# வெற்றி முனைப்பில் ஆஸி

MAGELLAN ASHES SERIES



ஆஷஸ் டெஸ்ட் தொடரின் சிட்னி பிங் டெஸ்டில் ஷோன், மிட்சல் மார்ஷ் சகோதரர்கள் சதம் கடக்க, அவுஸ்திரேலியா வெற்றியை நோக்கி ஜோராக முன்னேறுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் நான்கு போட்டிகள் முடிவில், அவுஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில தொடரை ஏலவே கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடக்கிறது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்கள் எடுத்தது. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 479 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

### அபூர்வ சகோதரர்கள்

நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தில் ஷோன் மார்ஷ், மிட்சல் மார்ஷ் சகோதரர்கள் அசத்தினர். 1939ஆம் ஆண்டிற்குப்பின், அதிக வெப்ப நிலையை சிட்னி நகரம் (47.3 டிகிரி செல்சியஸ்) எட்டியதால், பந்துவீச்சாளர்கள் தவித்தனர். இதனை பயன்படுத்தி, இருவரும் சதம் கடந்தனர். கரான் பந்தில் மிட்சல் மார்ஷ் (101) சிக்கினார். ஷோன் மார்ஷ் (156) ரன்-அவுட்டானார்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்கு 649 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதன்மூலம் 303 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. பெய்ன் (38), கம்மின்ஸ் (24) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### குக் ஏமாற்றம்

பின், இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. ஸ்ரார்க் 'வேகத்தில்' ஸ்டோன்மேன் 'டக்' அவுட்டானார். அலஸ்ரைர் குக் 10 ஓட்டங்கள் எடுத்தார். கம்மின்ஸ் பந்தில் வின்ஸ் (18) ஆட்டமிழந்தார். பின், இணைந்த அணித் தலைவர் ஜோ ரூட், மலான் ஜோடி நிதானமாக விளையாடியது. இந்த நேரத்தில், லயன் 'சுழலில்' மலான் (5) சிக்கினார். ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்கள் எடுத்து, 210 ஓட்டங்களால பின்தங்கி உள்ளது. களத்தில் அணித் தலைவர் ஜோ ரூட் (42), பேர்ஸ்டோவ் (17) இருந்தனர்.

இன்றைய இறுதி நாள் ஆட்டத்தில் மீதமுள்ள விக்கெட்டுக்களை விரைவில் வீழ்ததினால் ஆஸிஇன்னிங்ஸ் வெற்றிக்கு முயற்சிக்கலாம்.

### 3ஆவது சகோதரர்கள்

ஷோன் மார்ஷ், மிட்சல் மார்ஷ் இருவரும் சதம் கடந்தனர். இதன் மூலம், டெஸ்ட் அரங்கில் ஒரே இன்னிங்ஸில் சதம் அடித்த அவுஸ்திரேலியாவை சேர்ந்த 3 ஆவது சகோதரர்கள் என்ற பெருமை பெற்றனர். இதற்கு முன், இயன் சப்பல், கிரேக் சப்பல் மற்றும் ஸ்ரீவ் வோ, மார்க் வோ இந்த இலக்கை எட்டி இருந்தனர்.

# மரண அறிவித்தல்

## கந்தப்பு சிவநேசன்

காரைநகர் மாப்பாணவுரியை பிறப்பிடமாகவும் பத்தர்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு சிவநேசன் நேற்று (07.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற M.A.கந்தையா (மாஸ்ரர்) தம்பதியரின் அன்பு மகள் கமலாம்பிகையின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பத்தர்கேணி,
காரைநகர்.

(C-1156)

தகவல்:
மனைவி

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
சி.கேதீஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை



## அமரர் மாதவன் சின்னவன்

மலர்வு
16.11.1928

உதிர்வு
05.01.2018

அவர்கள் 05.01.2018 அன்று இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர்கள்
(1998ம் ஆண்டு அணி யாழ்ப்பாணம்)

| | | |
|---|---|---|
| உமாகரன் | ராமச்சந்திரன் | மன்மதன் |
| ஜனார்த்தனன் | துரைசிங்கம் | நிரஞ்சன் |
| தில்லை. சுரேஸ்குமார் | டீக்கன்ஸ் | கேசவன் |
| பிரபாலினி | ரமேஸ்குமார் | செல்வரட்ணம் |
| சிவதர்சினி | சந்திரலிங்கம் | அன்பழகன் |
| தனுசியா | ராஜேந்திரன் | |

(2323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினிகாந்த் கட்சி ஆரம்பிக்கும் போது நாமல் வாழ்த்துக்கூற காரணம் என்ன?

## சீமான் கேள்வி

(சென்னை)

நான் கட்சி ஆரம்பிக்கும் போது பாராட்டாத ராஜபக்ஷ வின் மகன் ரஜினிகாந்துக்கு ஆதரவு தெரிவிக்க காரணம் என்ன என நாம் தமிழர் கட்சி யின் தலைமை ஒருங்கிணை ப்பாளர் சீமான் கேள்வி எழுப் பியுள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணல் ஒன்றில், ரஜினி யின் அரசியல் பிரவேசம் குறி த்து சீமான் அதிரடியாக பல கரு த் துக்களை முன்வைத்துள்ளார்.



இதன்போதே, ரஜினிக்கு நாமல் தெரிவித்த வாழ்த்து குறித்தும் சில கேள்விகளை முன்வைத்துள்ளார்.

"நான் கட்சி ஆரம்பிக்கும் போது வாழ்த்து தெரிவிக்காத ராஜபக்ஷவின் மகன் ரஜினி காந்த் கட்சி ஆரம்பிக்கும் போது வாழ்த்து தெரிவிக்க காரணம் என்ன?

எம்மை கொன்று ஒழித்த வன் உனக்கு வாழ்த்து தெரிவி த்தால், நான் போராடி கேட்டும் நீதிகளை நீங்கள் எப்படி பெற் றுத்தருவீர்கள்?

ராஜபக்ஷவின் மகன் தமி ழினத்தின் தலை வனை எப்படி வாழ்த்துவார்? தமிழினத்தின் முதல்வரை ராஜபக்ஷவின் மகன் வாழ்த்துவாரானால் இழைக்கப்பட்ட அநீதிகளுக் கும், அழிக் கப்பட்ட உயிர்களு க்காகவும் போராடும் மக்களு க்கு என்ன உரிமை கிடைக் கும்? என்ன நீதி கிடைக் கும்?" என சீமான் கேள்வி எழுப்பியி ருந்தார். (இ-7)

இராசியில்லாத ஆட்சிக்கு இன்று மூன்றாண்டுகள் பூர்த்தி

# 100 ரூபாய் நாணயத்தாளில் மேளம் வாசிக்கும் ஜனாதிபதி நடனம் ஆடும் பிரதமர்

## உதய கம்மன்பிலவின் கண்களுக்கு புலப்படுகிறதாம்

(கொழும்பு)

நாம் பயன்படுத்தும் 100 ரூபாய் நாணயத்தாளின் பின் புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள உருவமானதுஜனாதிபதிமேளம் வாசிக்க, பிரதமர் நடனம் ஆடுவது போன்றே தனக்கு தென்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



கடவத்தையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித் தார். ஜனவரி எட்டாம் திகதி (இன்று) இந்த ராசியில்லாத ஆட்சிக்கு மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

அப்படியானால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இந்த அரசாங்கத்தை, வீட்டுக்கு அனுப்புவதா அல்லது இன் னும் இரு ஆண்டுகள் ஆட்சி நடத்த விடுவதா? என்கின்ற பிரச்சினைக்கு தான் நீங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று விடையளிக்க போகின் றீர்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிணைமுறி மோசடி தொடர்பில் என்னுடைய வாளு க்கு யார் யார் இலக்காகப் போகி ன்றார்களோ தெரியவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் நாட்டு மக்கள் இந்த விடயம் தொடர் பில் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கையில் அவருடைய வாளில் இருந்து யானை மற் றும் புலி என்பன தப்பிய நிலை யில், வெட்டுப்பட்டவை ஈக்கள் மாத்திரமே.

அவருடைய எண்ணத் தின் படி இன்று குற்றவாளிக ளாக இருப்பது ரவி கருணா நாயக்கவும், அர்ஜுன்மகேந்திர னும் மாத்திரமே. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவர்களை பொய்யர்கள் என வும், திருடர்கள் எனவும் அவர் களுக்கு எதிராக வழக்கு தொட ருமாறும் கூறியிருக்கிறது என தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாம் தற்போது பயன்படுத்துகின்ற 100 ரூபாய் நாணயத்தாளில் ஒரு பக்கம் குருவி இருக்கிறது. மறுபுறம் பொறிக்கப்பட்டுள்ள உருவ மானது ஜனாதிபதி மேளம் வாசிக்க, பிரதமர் நடனம் ஆடு வது போன்றே எனக்குத் தோன்றுகிறது என உதய கம்மன்பில தெரிவித்துள் ளார். (இ-7)

# நடிகர் நண்பனிடம் கண் கலங்கிய மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நெரு ங்கிய நண்பரிடம் தனது ஆதங்கங்களை வெளியிட்டு கண் கலங்கியதாக கொழு ம்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பிரபல நடிகர் ஸ்ரீயந்த மென்டிஸ், முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவை சந்தித்துள் ளார். இதன்போது வருத்தத் துடன் பல விடயங்களை மகிந்த கூறியுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி கொழு ம்பு கிங்ஸ்பரி ஹோட்ட லில் நடைபெற்ற தனது மக ளின் திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடு ப்பதற்காக, மகிந்த ராஜப க்ஷவை சந்திப்பதற்கு நடிகர் மென் டிஸ் அவரது விஜேராம இல்லத்திற்குச் சென்றுள் ளார்.

இதன்போது மகிந்தவால் விசேட வரவேற்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீயந்த எனக்கு விசேட மான ஒருவராவார். ஸ்ரீயந் தவின் கோரிக்கைகளுக்கு முடியாதென்று கூறவே முடி யாது. நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் என்னை சந்திப்பதற்கு பல கலைஞர் கள் வருகை தருவார்கள். அவர்கள் என்னை சுற்றியே இருந்தனர். இந்த இடத் தில் நடித்து, நடனமாடி பாடல் பாடி மகிழ்ந்த பலர் உள் ளனர்.

இறுதியில் அதிகாரம் இல் லாமல் போனவுடன் அந்த நபர்களை தேடி கொள்ளவே முடியவில்லை. எனினும் ஸ்ரீயந்த நம்முடனே தொடர் ந்து இருந்தார்...." என மகி ந்த வருத்தத்துடன் அந்த நடி கரிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய திருமணத் திற்கு சென்ற மகிந்தவை சுற்றி இளைஞர்கள் கூடி செல்பி எடுத்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. (இ-7)

# இந்திய மீனவர்களை இலங்கை விடுவிக்க வேண்டும்

## மத்திய அரசிடம் ஓ.பி.எஸ்.கோரிக்கை

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொ ள்ள வேண்டும் என தமிழக துணை பிரதி முதல்வர் ஓ.பன் னீர்செல்வம் தெரிவித்து ள்ளார்.

இதுகுறித்து மத்திய அரசா ங்கத்தை தமிழக அரசாங் கம் ஏற்கனவே கோரியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரா மேஸ்வரத்திற்கு விஜயம் செய்திருந்த ஓ.பி.எஸ். அங்கு கடற்றொழிலாளர்களின் பிரதி நிதிகளை சந்தித்து கலந்து ரையாடினார்.

ஏற்கனவே தமிழக முதல் வர் எடப்பாடி பழனிச்சாமி மத் திய அரசாங்கத்துடன் இது குறித்து தொடர்பினை ஏற்படு த்தியுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

தற்போது 84 இந்திய கடற்றொழிலாளர்களும் 150 இற்கும் மேற்பட்ட கடற்றொ ழில் படகுகளும் இலங்கை யில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லைதாண்டி கடற் றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச் சாட்டில் அவர்கள் இலங்கை யில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கச்சதீவை மீள இந்தியாவிடம் கையளிக்க வேண்டும் என காலஞ்சென்ற முன்னாள் முதல்வர் ஜெயல லிதாவினால் தாக்கல் செய் யப்பட்ட வழக்கு இந்திய உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என ஓ.பன்னீர செல்வம் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

08.01.2018

மார்கழி 23,திங்கட்க்கிழமை

சூரிய உதயம் காலை 06.31 மணிக்கு

சப்தமி முன்னிரவு 09.55 மணிவரை

உத்தரம் முற்பகல் 07.11 மணிவரை

சுபநேரம் 12.32-2.02 மணிவரை

இராகுகாலம் 8.02-9.32 மணிவரை

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
சதயம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | ராகு |
| கேது | | | |
| சூரி, சுக் சனி, புத | | குரு,செவ் | சந் |

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உறவி னர்களின் வருகையுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை வசூ லிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** கல்யாணக் கனவுகள் நனவா கலாம், பிள்ளைகளின் நல னின் அதிக அக்கறை காட்டு வீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவா கும், பொதுக்காரியங்களில் நாட்டம் செல்லும்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, விரயங்கள் கூடும், முயற்சிக ளில் தாமதங்கள் ஏற்பட லாம், பிரயாண பயமுண்டு.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்கள் எண்ணிக்கை கூடும், நிதி நிலை உயரும் நாள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்க்ள், ஆரோக்கிய மான நாள்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதுகலம் காணவேண்டிய நாள்,பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** விலை உயர்ந்த பொரு ட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,குடும்ப மகிழ் ச்சியுண்டு, பேச்சில் இனிமை தென்படும், ஆன்றோர் சந்திபுண்டு.

**தனுசு:** கொடுத்த வாக்கை காப்பா ற்றி மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு, தொழிலை விரு த்தி செய்யும் எண்ணம் மேலோ ங்கும், வருங்கால கலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனு கூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், கூட்டாளிகளி டம் கொஞ்சம் கவனம் தேவை.

**கன்னி:** கருத்து முரண்பாடுகள் அக லும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தி யாகும், கற்பனை மிகுதி யான நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான தொடர்பாடல் கட்டமைப்பை ஸ்தாபித்தது தெல்லிப்பழை பிரதேச செயலகம்



(தெல்லிப்பழை)

முற்றிலும் பொது மக்களுக்காகவே முதல் முறையாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட டிஜிட்டல் தகவல் தொடர்பாடல் முறையினை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ ஆரம்பித்து வைத்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இவ் டிஜிட்டல் தகவல் கட்டமைப்பு முறையின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு அரச சேவை தொடர்பான விபரங்களையும் தமிழ், ஆங்கிலம்,சிங்களம் ஆகிய மொழிகளில் தாம் பயன்படுத்தும் எந்தவொரு தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதேச செயலாளரினால் நேரடியாக வழங்கப்படும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போது பொதுமக்கள் தாம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற எந்தவொரு அரச சேவை தொடர்பான தகவல்களை கிராம மட்ட உத்தியோகத்தர்கள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்திற்கு வருகை தந்தே பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரும்பாலான கிராம அலுவலர் பிரிவுகள் உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது மீள்குடியேற்ற பகுதிகளாக காணப்படுவதுடன் இக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் யாழ்.மாவட்டத்திலும் பிற மாவட்டத்திலும் வசிப்பதால் தாம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் அரச சேவைகள் தொடர்பான பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் டிஜிட்டல் தகவல் கட்டமைப்பு முறையின் மூலம் சகல அரச சேவைகள் தொடர்பான விபரங்களையும் பிரதேச செயலாளரினால் நேரடியாக எந்த ஒரு இலகத்திற்கும் பதிலாக DS Tellipalai என்ற பெயரில் இருந்து நேரடியாக பொது மக்களுக்கு தெரிவிப்பார்.

அரச சேவை ஒன்றிக்காக தெரிவு செய்யப்பட்ட ஒரு பொதுமகன் தனது சேவை தொடர்பான விபரங்களையும் சேவை பெற்றுக் கொள்ள அரச நியமங்களின் படி தகுதியற்ற ஒரு பொதுமகன் அவை ஏன் தனக்கு வழங்கப்படவில்லை என்ற தகவலையும் அவை எதிர்காலத்தில் கிடைக்குமாயின் அது பற்றிய விபரங்களையும் பிரதேச செயலாளர் நேரடியாக தெரிவிப்பார்.

பிரதேச செயலாளரினால் நடத்த தீர்மானிக்கப்பட்ட பொதுமக்களுக்கான கலந்துரையாடல்கள் விசேட கூட்டங்கள் ம்ற்றும் நிகழ்வுகளுக்கான விபரங்களையும் பிரதேச செயலாளர் நேரடியாக பொதுமக்களுக்கு தெரிவிப்பார்.

தகவல்தொடர்பாடல்முறையில் பல புதிய புதிய மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இன்றைய உலகில் அதியுயர் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதை உறுதிப்படுத்துவதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாக இருப்பதுடன் எம்மால் ஆற்றப்படும் சகல சேவைகள் தொடர்பான விபரங்களையும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடிவதால் பொதுமக்கள் மத்தியில் சிறந்த நம்பிக்கையை அரச சேவை தொடர்பில் ஏற்படுத்த முடியும் என்று இம்முறையினை ஆரம்பித்து வைத்து தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தெரிவித்தார். (இ-7-104)







முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் பத்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அராலி மத்தி அபிவிருத்தி சங்க மகேஸ்வரன் இலவச கல்வி நிலையத்தில் ஐ.தே.கட்சியின் வட்டுக்கோட்டை அமைப்பாளர் ச.லவக்குமார் தலைமையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அமரரின் நினைவஞ்சலி கூட்டத்தில் பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர்.

## குருநகரில் வீட்டில் தீ விபத்து! பல பொருட்கள் எரிந்து நாசம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்குருநகர்ஐந்து மாடிகுடியிருப்புக்குஅண்மையில் அமைந்திருந்த வீடு ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில்பல பொருட்கள் எரிந்து சாம்பலாகின.

நேற்று குறித்த வீட்டின் அறை ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக அந்த வீடு தீப்பற்றி எரிந்துள்ளது. புகை மண்டலமாக அறை காணப்பட்டதால் வீட்டில் இருந்தவர்கள் வெளியே ஓடிச் சென்றனர் அயலவர்கள் தீயணைப்பு பிரிவினருக்கு அழைப்பை ஏற்படுத்தியதை அடுத்து அங்கு வந்த தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்தனர்.

அந்த அறையில்மட்டுமே தீ பரவியதால் வீட்டிலிருந்த 2 குழந்தைகள் உட்பட 5 பேரும் தெய்வாதீனமாக பாதிப்பு ஏதுமின்றி தப்பித்துள்ளனர்.

தீ பரவிய அறைக்குள் இருந்த பெறுமதியான பொருட்கள் மற்றும் அத்தியாவசிய ஆவணங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன. (இ-9-106)

## விவேகானந்தரின் ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினால் சுவாமி விவேகானந்தரின் 156 ஆவது ஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் உரும்பிராய் சந்தி, மருதனார்மடம் வீதி, இலக்கம் 17இல் உள்ள இராம கிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோண்டாவில் இந்துக்கல்லூரி அதிபர் செ. மோகநாதன் கலந்து கொள் வார். (இ-10)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 10ம் திகதி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பகிர ங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்கானை பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் ந.சிவரஞ்சன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் கி.செந்தூரன், சங்கானை பிரதேச செயலக கணக்காளர் ஞா.லோகநாதன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள் வர். (இ-10)




## தொண்டைமானாறு பாலத்தில் மீன்பிடி அதிகரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அருகிலுள்ள பாலத்தின் மேல் நின்று மீன்பிடிக்கும் தொழிலை பலர் மேற்கொண்டு வருகின்றனர்.தற்போது இப்பகுதியில் அதிகளவான மீன்கள் பிடிபடுவதால், அங்கு மாலை நேரங்களில் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளனர்.தொழிலில் ஈடுபடுபவர்கள் வீச்சு வலையைப் பயன்படுத்தி [illegible] பிடிக்கின்றனர். அவர்கள் பிடிக்கும் மீன்களை அப்பகுதியால் சென்று வருபவர்களே அதிகளவில் கொள்முதல் செய்கின்றனர். குறிப்பாக பெரிய அளவிலான கயல் மீன்கள் அந்தப்பகுதியில் பிடிபடுகின்றன. (இ-26)

## வாழ்வக நிறுவுநர் அன்னலட்சுமியின் உதய நாளும் பரிசுத்தினமும் 11ம் திகதி

(யாழ்ப்பாணம்)

வாழ்வக நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாளும் பரிசுத்தினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் வாழ்வக செல்வா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமார், வடக்கு மாகாண ஹற்றன் நஷனல் வங்கி பிராந்திய முகாமையாளர் சி. சுந்தரேஸ்வரன், தேசிய கல்வி நிறுவக உட்படுத்தல் கல்வித்துறை விரிவுரையாளர் பி. வினிதாஜினி, கலாபூஷணம் பாஸ்கரன் ஆசிரியர் மற்றும் உடுவில் வைத்திய அதிகாரி க.விமலகுமார், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுரு [illegible] வர். (இ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் குடும்பங்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடாது!

## அதிரடிப்படைக்கு அதிரடி உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர்களின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிரடிப்படையினர், அமைச்சர்களை தவிர வேறு எவருக்கும் பாதுகாப்பு வழங்கக்கூடாது என கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சர்களைத் தவிர அவரது பணிக்குழுவினர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையின் தலைமையகம் அறிவித்துள்ளது.

மேலும் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கி செல்லும் வாகனங்களில் வெளியாரை ஏற்றிச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாவலர்கள் அமைச்சர்களுக்கு மாத்திரமல்லாது அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கும் பயன்படுத்தப்பட்டமையை கவனத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சு.க.அமைப்பாளர்களே வாளுக்கு இரையாவர்

### உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொகுதியை வெற்றிபெறச் செய்ய முடியாத அமைப்பாளர்கள் ஜனாதிபதியின் வாளுக்கு இரையாவார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்து வரக்கூடிய மாகாண சபைத் தேர்தலுக்காக புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ள ஆலோசனையின் கீழ் சகல தொகுதி அமைப்பாளர்களும் மாவட்ட அமைப்பாளர்களும் பொது மக்களிடம் நேரடியாகச்சென்று கட்சியின் வெற்றிக்கு உழைக்க தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என கட்சி எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# வல்வெட்டித்துறை கடற்கரையில் பெருமளவு போதைப்பொருள் மீட்பு





(கரணவாய்)

வடமராட்சி வல்வெட்டித்துறைக் கடற்கரையிலிருந்து பெருமள வான போதைப் பொருட்களை கடற் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை கடற் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் 90 கிலோகிராம் கேரளக்கஞ்சா மற்றும் 4 கிலோகிராம் அபின், ஹாகிஸ் எனப்படும் போதைப் பொருள் நான்கு கிலோ என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. (இ-15-60)

# மருத்துவ பீட மாணவ பெற்றோர் சங்கம் தொடர் போராட்டத்திற்கு ஆயத்தம்




(கொழும்பு)

சைட்டம் எதிர்ப்பு தொடர் போராட்டம் இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ பீட மாணவ பெற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று கொழும்பில் இடம்பெற்ற அந்த சங்கத்தின் தேசிய நிறைவேற்றுசபை கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதன் ஊடகப் பேச்சாளர் நிமால் கருணாசிறி தெரிவித்துள்ளார். (இ-7)


அகவை அறுபதில் (60) அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு.அருணாசலம் அகிலதாஸ்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின்
கல்வி அபிவிருத்திப் பிரிவில்
முகாமைத்துவப் பிரதிக்
கல்விப் பணிப்பாளராக
2016.03.09 - 2018.01.05 வரை
பணியாற்றி இன்று மணிவிழாக் காணும்
திரு.அ.அகிலதாஸ்
அவர்களை
பல்லாண்டு காலம் நல்வாழ்வு வாழ
இறையருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.

கல்வி அபிவிருத்திப் பிரிவு,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(8318)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மணிவிழா வாழ்த்து



திரு.
அருணாசலம் அகிலதாஸ்

அகவை அறுபதில் அடி எடுத்து வைக்கும்
அகிலதாஸ் என்னும் கல்வியாளர்
அகிலம் போற்றும் வித்தகனாய்
அதிகாரியாகவும் இருந்து
அசத்தியே பணிதனில் காட்டிய
அற்புதமான அறிஞரே!
கோப்பாய் மகா வித்தியாலயம் தன்னில்
கொடிகட்டிப் பறந்தவரே – உங்கள்
பணிதனை என்றும் மறவோம்
வாழ்க! உங்கள் பணி தொடரட்டும்.
(2865)

அதிபர், ஆசிரியர்கள்,
நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:19<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/8121 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 8 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8136 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்<br>தொ.இ: B/8126 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 52 சூரி செவ் 1இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/8137 |
| பிறப்பு: 1977 இந்து<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்<br>தொ.இ: B/8127 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8141 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 23 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HND/தனியார்தொழில்<br>தொ.இ: B/8128 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: சூரி செவ் 10இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8143 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைசார் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் பனைசார் உற்பத்திப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபையின முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர எம்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் பனம் கைத்தொழில் சார் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட முகாமையாளர குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்யும் வகையில் பனைசார் பயிற்சி நெறிகள் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்டு அதன் மூலம் பலர் நன்மையடைந்திருக்கின்றனர்.

2017 ஆம் ஆண்டிலே முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவாயிரத்து ஐந்நூறு லீற்றர் வரையான பனம்களி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 2016ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு அமைவாக கடந்த ஆண்டில் இருபதாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இந்த பனம் நடுகையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரப்பகுதியை அண்மித்த முள்ளிவாய்ககால், அளம்பில், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், நாயாறு ஆகிய பகுதிகளில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடம் பனை உற்பத்திப்பொருளான ஒடியல் அதிகளவில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கழிவுகள் கொட்டப்படுகின்ற பகுதியில் சுற்றுமதில் அமைக்க முன்மொழிவு சமர்ப்பிப்பு

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பளைப் பிரதேசத்தில் கழிவுகள் கொட்டப்படுகின்ற பகுதியில் சுற்றுமதில் அமைப்பதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கின்றோம். அதற்கான அனுமதிகள் கிடைக்கின்றபோது அதனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் எஸ். அனுசியா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் பிர தேச சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படும் இடம் பாதுகாப்பற்ற முறையில் இருக்கின்றது. இதனால் பலரும் பலர் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். அண்மையில் இப்பகுதியில் கொட்டப்படும் கழிவுகளை உட்கொண்டு கால்நடைகள் சில இறந்த சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

இவ்வாறு கொட்டப்படுகின்ற கழிவுகள் உரிய முறையில் பாதுகாக்க கொட்டப்பட்டு அழிக்கப்படவேண்டுமென பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் பச்சிலைப் பள்ளிப்பிரதேச சபையின் செயலாளர் எஸ். அனுசியாவைத் தொடர்பு கொண்டு வினவிய போது, அல்லிப்பளை பிரதேசத்தில் கழிவகற்றலுக்கென ஒதுக்கப்பட்ட அரச காணிப்பகுதியிலேயே கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இதைச் சூழவுள்ள பகுதிகளுக்கு அண்மையில் மக்கள் குடியிருப்புக்கள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட அவர் இதற்கு பாதுகாப்பு மதில்களை அமைக்க முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கின்றோம். அதற்கான முன்மொழிகள் கிடைக்கும் பட்சத்தில் மதில்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)




# வைத்தியர்களின்றி இயங்கும் நட்டாங்கண்டல் வைத்தியசாலை

(மல்லாவி )

நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படாத நிலையில் பதில் கடமையாற்றுவதற்கான வைத்தியர்களும் நியமிக்கப்படாமையால் பிரதேச வைத்திய சாலையை நம்பியுள்ள பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் 10 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள மல்லாவி ஆதார வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையை நம்பி மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 961 குடும்பங்கள் தமது நோய் தாக்கத்தற்கான வைத்திய சிகிச்சைகளை பெற்று வருகின்றனர். இந் நிலையில், இங்கு நீண்ட காலமாக நிரந்தர வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதனால், இங்குள்ள மக்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வதற்காகவும் மற்றும் விச ஜந்துகளின் விசக்கடி சிகிச்சைகளுக்காகவும் பலத்த சிரமத்தின் மத்தியில் வாடகை வாகனங்கள் அல்லது துவிச்சக்கர வண்டிகள் மூலமாக சுமார் 10 மைல் தூரத்திற்கு அப்பால உள்ள மல்லாவி ஆதார வைத்திய ாலைக்கு கொண்டு செல்லும் நிலை காணப் படுகிறது. அத்துடன், இங்கு மக்கள் மீள் குடியேற்றத்தின் போது பல இலட்சம் ரூபா நிதி' ஒதுக்கீட்டில் உள்ளக நோயாளர் விடுதி, வெளி நோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி உட்பட வைத்தியர்கள் விடுதிகளும் புதிதாக அமைக்கப்பட்ட போதும அது வைத்தியர்கள் இல்லாமையால் செயலிழந் துள்ளது.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு தமது நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிர ந்தர வைத்தியர் ஒருவரை அல்லது பதில் வைத்தியர் ஒருவரையாவது நியமித்துத் தருமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் தீயினால் எரிந்து நாசமான வீட்டின் உரிமையாளர்களுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினரால் ஒரு தொகுதி நிவாரண பொருட்கள வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி புதுக குடியிருப்பு முதலாம் வட்டாரப் பகுதியில் அமைந்துள்ள ரகுநாதன் சுவீஸ்கரன் என்பவரின் தற்காலிக வீடு மின் ஒழுக்கு காரணமாக முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ள துடன பல இலட்சம் பெறுமதியான வீட்டு உபகரணங்கள், உணவு, உடு புடைவைகள் என்பன தீயில் கருகி நாசமாகின.

இந்நிலையில் இவர்களுககான உதவிகளை அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள மேற்கொண்டு வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளை யினரால் ஒருதொகுதி நிவாரணபொருட்கள் வழங்கி வைககப்பட்டுள்ளன. (2-281)

# கணனி, தையல் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி பயிற்சி நிலையத்தினால் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கணனிப்பயிற்சி மற்றும் தையல் பயிற்சி என்பன ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி கிளிநொச்சி மன்ற நிர்வாக அதிகாரி (வடக்கு) அறிவித்துள்ளார்.


இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்புகின்ற பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் 2018.01.10 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, பயிற்சி நிலையம், தேசிய இளைஞர்சேவைகள் மன்றம் ஏ-9 வீதி, கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை விண்ணப்பிக் குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதற்கமைய கணனிப் பயிற்சியைத் தொடர விரும்புகின்றவர்கள் 18-29 வயது குட்பட்டவர்களாகவும் க.பொ.த.(சா/த) சித்தியும் பெற்றிருத்தல் அவசியம்.

இப்பயிற்சிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும். தையல் பயிற்சியை தொடர விரும்புகின்றவர்கள் 18-29 வயதுக்குட்பட்வர்களாகவும் எட்டாம் வகுப்பு சித்தியை அடைந்திருத்தல் வேண்டும். பெண்கள்மட்டுமே தையல பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும். பயிற்சிகளின் முடிவில் NVQ தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

இதேவேளை கணனிப் பயிற்சி வகுப்பில் கலந்து பயிற்சி பெறும் மாணவர்களிடமிருந்து சிறுதொகை பணம் அறவிடப்படும் என அவர் அறிவித்துள்ளார். (2)

# சீனிப்பாணி காய்ச்சி தேன் என விற்பனை செய்தவர்களுக்கு இன்று வரை விளக்கமறியல்



(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஊர் மிளாக்கோட்டம் பகுதியில் சீனிப்பாணியை காய்ச்சி தேன் என விற்பனை செய்த பெண் உட்பட இருவரை கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஊர் மிளாக்கோட்டம் பகுதியில் சீனிப்பாணியைக் காய்ச்சி தேன் என விற்பனை செய்வதாக வவுனியா சுகாதார பரிசோதர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தியாகலிங்கம் , பொதுச்சுகாதார பரிசோதகர் வோல்ட்டயன் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் நெளுக்குளம் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது ஊர்மிளாக் கோட்டம் பகுதியில் வீடொன்றில் சீனிப்பாணி காய்ச்சிய 38வயதுடைய பெண்ணொருவரையும் 26 வயதுடைய ஆணொருவரையும் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து போத்தலில் தேன் என அடைக்கப்பட்டிருந்த 73 போததல் சீனிப்பாணியையும் சுகாதார சீர்கேடான முறையில் காய்ச்சப்பட்ட 2 அரை பீப்பாய் சீனிப்பாணியையும் பட்டா வாகனமொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருநபர்களையும் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது இன்று திங்கட் கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (2-250)

# நடைபாதை வியாபாரத்திற்கு

# சாதகமான பதில் இன்று கிடையாதுவிடின் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்வோம்

(குருமன்காடு)



வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்குள் வியாபாரம் செய்வதற்கு தமக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நடமாடும் வியாபாரிகள் சக வாழ்வு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்று காலை மையப் பேருந்து நிலையத்தில் மாற்றுவழி குறித்து சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதுடன் அதில் உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் இன்று முற்பகல்10மணியளவில் புதிய பேருந்து நிலையத்திலுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் [illegible] விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நடைபெறும் சந்திப்பில் எமக்கு சாதகமான பதில் கிடையாது விட்டால் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து எமது சங்க உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் நிலைமைகளை எடுத்துக் கூறி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவும் நேற்றைய கலந்துரையாடலின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நாங்கள் கடந்த ஏழு தினங்களாக பணியின்றி இருந்து வருகின்றோம். எனவே எமக்கு சாதகமான பதில் இன்று கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் தெரிவித்துள்ளனர்.(2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் லொறி வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி மூன்று மாடுகளை ஏற்றிச்சென்றவரை கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மூன்று மாடுகளை லொறி வாகனத்தில் ஏற்றிச்சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த ஒட்டுசுட்டான் பொலிஸார் கடந்த 5 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா காசுப்பிணையிலும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் செல்லுமாறும் குறித்த மாடுகளை ஒரு இலட்சம் ரூபா பிணைமுறியில் கொண்டு செல்லுமாறு கட்டளையிட்டுள்ளதுடன், இதன் விளக்கத்திற்காக பெப்ரவரி மாதத்திற்கு தவணையிடப்பட்டுள்ளது.

□□□□□□□□□□□□□□□□□□

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிச்சென்ற ஒருவரை கைது செய்த அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த நபரை கடந்த 5 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□□□□□□□□□□□

கிளிநொச்சி பகுதியில் 96 ஆயிரத்து 645 ரூபா பெறுமதியான முதிரை மரத்தீராந்திகளை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்ற பிரதான சந்தேகநபருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணமும் ஏனைய இரண்டு பேருககும் இருபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச காட்டுப்பகுதிக்குள் அத்துமீறி உட்புகுந்து 96 ஆயிரத்து 645 ரூபா பெறுமதியான முதிரைமரந்தீராந்திளை முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்ற மூன்றுபேரை கைது செய்த வனவள அதிகாரிகள் குறித்த மூவரையும் கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து முதலாவது சந்தேகநபருக்கு இரண்டு குற்றச் சாட்டுக்களுக்கும் தலா இருபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் பதினைந்து நாட்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடுமாறும் கட்டளையிட்டுள்ளதுடன். ஏனைய இரண்டு சந்தேக நபர்களுக்கும் தலா இருபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□□□□□□□□□□□

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கசிப்புடன் கைது செய்யப்பட்ட 11பேருக்கு அறுபத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அண்மைய நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதிகளில் பொலிஸாரும் மதுவரித்திணைக்கள அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்ற விசேட நடவடிக்கைகள் மூலம் பலர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த வகையில் முல்லைத்தீவு மதுவரித் திணைக்க அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 180 மில்லிலீற்றர் கசிப்பு, 375 மில்லி லீற்றர் கசிப்பு என்பவற்றை உடைமையில் வைத்திருந்த இரண்டு பெண்கள் உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த மதுவரித்திணைக்கள அதிகாரிகள் குறித்த ஒன்பது பேரையும் கடந்த 5 ஆம் திகதி தனித்தனியாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் நாற்பத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 550 மில்லிலீற்றர் மற்றும் 500 மில்லிலீற்றர் கசிப்பு என்பவற்றை உடைமையில் வைத்திருந்த இரண்டு பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது,

□□□□□□□□□□□□□□□□□□

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் அரச காட்டிற்குள் அத்துமீறிச்சென்று இரண்டு இலட்சத்து 14 ஆயிரத்து 312 ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்ற சந்தேகநபரை ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான காசுப்பிணையுடன் கூடிய கடும் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் அரச காட்டிற்குள் அத்துமீறிச்சென்று மேற்படி பெறுமதியுடைய முதிரை மரக் குற்றிகளை வெட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்ற ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த வனவளத் திணைக்கள அதிகாரிகள் குறித்த நபரை கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபர் சுற்றவாளியெனத் தெரிவித்ததையடுத்து ஐம்பதாயிரம் ரூபா காசுப்பிணையிலும் கிராம அலுவலர் வதிவிடத்தை உறுதிப்படுத்தியும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்லுமாறும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றத்தில் கையொப்பமிடுமாறும் கட்டளையிட்டுள்ளதுடன் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி விளக்கத்திற்காக தவணையிடப்பட்டுள்ளது. (2-315)

# குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு ஆயிரத்து 300 குடும்பங்கள் விண்ணப்பங்கள் அனுப்பி வைப்பு

## 229 இணைப்புக்கள் வழங்கல்; தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் சுபேந்திரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களினுடைய விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் 229 வரையான இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து ஏனைய குடும்பங்களுக்கான குடிநீர் விநியோக இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்டப் பொறியியலாளர் ஆர்.சுபேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர் விநியோகத் திட்டம் நாட்டில் இடம் பெற்று முடிந்த கடந்த யுத்தத்தின் போது சேதமடைந்துள்ளதுடன், கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்த நீர்த்தாங்கியும் பரந்தன் மற்றும் தட்டுவன் கொட்டிப் பகுதியிலிருந்த நீர்த்தாங்கிகளும் உடைத்து சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நாற்பதாயிரம் பேருக்கான குடிநீர் விநியோகத்திட்டத்தை மேற்தொள்ளும் வகையில் குடிநீர் விநியோகத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் பெறும் கிணறு என்பன கிளிநொச்சி குளத்தினை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி இரத்தினபுரம் , பரந்தன் குமரபுரம் ஆகிய பகுதிகளில் இரண்டு பாரிய நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு நீர் விநியோக குழாய்கள் பொருத்தப்பட்டன.

ஜப்பானிய அரசின் 925 மில்லின் ரூபா நிதியிலும் இலங்கை அரசாங்கத்தினது 740 மில்லியன் ரூபா நிதியிலும் மேற்படி குடிநீர் விநியோகத்திட்டம் மேற்ஏகாள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு குடிநீர் விநியோக மீள்கட்டுமானங்கள் தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினுடைய மாவட்டப் பொறியியலாளர் ஆர்.சுபேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், கிளிநொச்சி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களிலிருந்து குழாய் மூலமான குடிநீர் விநியோகத் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

இவற்றுக்கான இணைப்புக்களை வழங்குவதற் கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. இது வரை 229 வரையான இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனையோருக்கான இணைப்புக்களை வழங்குவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




### தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால்

## மானியத் திட்டங்களுக்கு காசோலை வழங்கல்

(முல்லைத்தீவு)

தென்னை பயிர்ச்செய்கைச் சபை, கற்பகதரு சங்கத்தினரின் அனுசரணையுடன் சமூக நலன் வேலைத்திட்டமாக "சிறு நீரக பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதனை தவிர்க்கும் வழி முறைகளும்" எனும் கருப்பொருளில கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளையில் அமைந்துள்ள ஊற்றங்கரை பிள்ளையார் கோயில் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு வளவாளராக அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் துறைசார்ந்த வைத்தியர் பங்குபற்றவுள்ளார். இந்நிகழ்வில் 2017 ஆம் ஆண்டுக்குரிய தென்னை மானியத் திட்ட முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கு காசோலைகளும் வழங்கப்படவுள்ளன. (2)

# இலங்கை பிரச்சினை விடயம் தொடர்பில் கனடா இறுக்கமான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பு

## கனேடிய எம்.பி ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



(பரந்தன்)

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காணாமலாக்கப்பட்ட உறவினர் மேற்கொள்ளும் போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு விஜயம்மேற்கொண்ட ஹறி ஆனந்தசங்கரி அவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க அவரிடம் தமது பிள்ளைகள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறினர். தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த ஹறி ஆனந்த சங்கரி,

காணாமலாக்கப்பட்டவர்களை சந்திப்பதற்காக தான் இன்று இங்கு வந்ததாகவும், கடந்த காலங்களை போன்றே காணப்படுவதாகவும், எவ்வித முன்னேற்றமும் இல்லை என வும் அவர் குறிப்பிட்டார். இலங்கைக்கு வந்த கனேடிய உயர் ஸ்தானிகருடன் தங்க கிடைத்ததாகவும், அதன்போது பல விடயங்கள் எடுத்துரைக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பிரச்சினை விடயம் தொடர்பில் கனடா இறுக்கமான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பது தொடர்பிலும் அவர் இதன் போது தெரிவித்தார். (2-312-315)

# தரமற்ற கிரவல் மண்ணை பயன்படுத்தி வீதிப்புனரமைப்பு

## கிராம மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிச் செயலாளரிடம் முறைப்பாடு



(மல்லாவி )

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாங்குளத்தில் ஏ-9, வீதியில் இருந்து புதிய கொலனி குடியிருப்பு நோக்கிச் செல்லும் முத்துமாரியம்மன் வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கு தரமற்ற கிரவல் மண்ணைப் பயன்படுத்தி வீதிப் புனரமைப்பு பணிகள் நடை பெற்று வருவதாகவும், இதனால் பெரும் தொகை அரச பணம் வீண் விரயமாக்கப்படுவதை தடுத்து நிறுத்தி தரமான முறையில் வீதிப் புனரமைப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து உதவுமாறு இந்த வீதியைப் படுத்தும் கிராம மக்கள் இணைந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிச் செயலாளர் ஜெ. ராஜமல்லிகையிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மீள் குடியேற்ற அமைச்சின் விசேட நிதியொதுக்கீடான 15 இலட்சம் ரூபா உதவியுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் மாங்குளம் புதிய கொலனிக் குடியிருப்புக்குச் செல்லும் முத்துமாரியம்மன் வீதியில் ஆயிரம் மீற்றர் தூரத்திற்கு வீதி அகலிப்புடன், கிரவல் மண் இட்டும் மற்றும் கழிவு நீர் துருசுக்கள் அமைத்தும் புனரமைப்பு செய்வதற்காக மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் வேலைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வேல்லையை பொறுப்பேற்ற கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மாங்குளம் ஊடாக செல்லும் புகையிரத பாதையின் புனரமைப்புக்காக அகற்றப்பட்ட கழிவு மண்ணைப் பயன்படுத்தி முத்துமாரியம்மன்வீதி புனரமைப்பை மேற்கொண்டு வருவதாகவும், வீதியில் பரவப்படும் கழிவு மண்ணுடன் குப்பைகளும் சேர்ந்து புனரமைப்பு செய்யப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டி ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி செயலாளரிடம் முறையிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமைகளைக் காக்கும் நாடாக இலங்கையை சர்வதேசம் ஏற்றுள்ளது

## சபாநாயகர் கருஜெயசூரிய சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**மனிதவுரிமைகளைக் காக்கும் ஒரு நாடாக இலங்கை மிளிர்வதை சர்வதேசம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.**

இலங்கை மனிதவுரிமைகள் சம்மேளனத்துக்கு விஜயம் செய்த அவர், அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னொரு காலத்தில் மனிதவுரிமைகள் குறித்த கடும் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை முகங்கொடுத்து வந்தது.

அதேவேளை, சிறந்த அரசு ஒன்றுக்கான தேவையும் மிகக் கடுமையாக உணரப்பட்டு வந்தது. தற்போதைய நல்லாட்சி அரசின் பதவியேற்புடன் அந்தக் கரும புள்ளி துடைக்கப்பட்டிருக்கிறது.

"சில நாட்களுக்கு முன் சர்வதேச நாடுகளின் பங்கேற்புடன் மனிதவுரிமைகள் குறித்த மாநாடு நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டது. பல ஆசிய நாடுகள் பங்கேற்கவிருந்த இந்த மாநாட்டை நடத்தும் கௌரவம் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தது. காரணம், இலங்கையில் இன்று மனிதவுரிமைகள் பேணப்பட்டு வருவதே.

"நமது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது வெளிநாட்டு விஜயங்களின்போது, சிறந்த ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பியிருப்பது போன்ற அம்சங்கள் குறித்து பாராட்டுப் பெற்று வருகின்றனர். இது இந்த நல்லாட்சியின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மீன் ஏற்றுமதித் துறையில் இலங்கை 11 வது இடத்தில்



(கொழும்பு)

மீன் ஏற்றுமதி துறையில் இலங்கை 11 ஆவது இடத்தில் உள்ளது எனவும் 2020ஆம் ஆண்டளவில் மீன் ஏற்றுமதியில் இலங்கையை மூன்றாவது இடத்திற்கு கொண்டு வருவதே எமது இலக்காகும் என்று கடற்றொழில் மற்றும் நீர்வளமூல அபிவிருத்தி அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

கடற்றொழில் துறையின் வளர்ச்சியை தொடர்ந்தும் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# முன்னாள் ஆட்சியாளர்களின் திட்டத்தை அறிந்ததாலேயே லசந்த கொலை செய்யப்பட்டார்

## அமைச்சர் ராஜித தகவல்



(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான திட்டமொன்றை முன்கூட்டியே அறிந்து கொண்டதன் காரணமாகவே சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 71 ஆவது மாநாட்டில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உக்ரைன் நாட்டுடன் மகிந்த அரசாங்கம் மேற்கொள்ளவிருந்த முறைகேடான ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் ஊடகவியலாளர் லசந்த அறிந்திருந்ததாகவும் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அவர் கொலை செய்யப்பட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த வேளை, லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கொலையுடன் கடந்த ஆட்சியாளர்களே தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருமலையில் ஐ.தே.க.வேட்பாளர் கிளைக் காரியாலயம் உடைப்பு



(திருமலை)

திருகோணமலை - கந்தளாய் -பேராறு பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரின் கிளைக் காரியாலயம் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பேராறு கிழக்கு பத்தாம் வட்டார வேட்பாளருமான என்.எம்.கே.சுபார்கான் என்பவருடையது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பிரதான கட்சிகளுக்கு சாதகமாக செயற்படும் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)


தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும் .மாறாக பிரதான கட்சிகளுக்கு மாத்திரம் சாதகமாக செயற்படுவது ஆணைக்குழுவின் இழுக்கான செயற்பாடாகும் என தேசிய விடுதலைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் கலகம தர்மஞானதேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)





தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 2018 ஆம் ஆண்டு தரம் 6 இற்கு அனுமதி பெற்ற புதுமுக மாணவர்களை வரவேற்று அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த. கணேசநாதன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாம்பும் கீரியும் திருமணம் செய்வதற்கு ஒப்பானது

# கோத்தபாய இணைந்தால் நான் வெளியேறுவேன்



## பொன்சேகா அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க அரசாங்கத்தில் இணைந்தால், தான் அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொள்வேன் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் எந்த வகையிலும் இணையக்கூடாது. இந்த கட்சிகள் இரண்டு இணைவது என்பது பாம்பும் கீரியும் திருமணம் செய்வது கொள்வதற்கு ஒப்பானது. மகிந்த ராஜபக்ஷ போன்றவர் தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றலாம் என்று தான் எண்ணவில்லை எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

## வீதியைப் புனரமையுங்கள்



(கரணவாய்)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கரவெட்டி கிழக்கு யாக்கருச் சந்தியிலிருந்து வளர்மதி சந்தி வரையிலான வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது இருப்பதால் குறித்த வீதியால் செல்லும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதோடு விபத்துக்குள்ளாகும் அபாயம் இருப்பதாக கவலை வெளியிட்டுள்ளனர். இவ் வீதித்திருத்தம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை யெடுக்கப்படவில்லையென பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-10-60)

## துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழப்பு

### விறகு எடுத்தவர்கள் மீது செனகலில் கொடூரம்

மேற்கு ஆபிரிக்கக் குடியரசு நாடான செனகலில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூடு மற்றும் கத்திக்குத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 9 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முறுகல் நிலைமை காணப்படும் காஸமன்ஸ் (Casamance) பகுதியிலுள்ள காட்டில் விறகு எடுத்துச் கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாத துப்பாக்கிதாரி யொருவர் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) துப்பாக்கிச சூடு மற்றும் கத்திக்குத்தை நடத்தியுள்ளார். இதன்போது 13 பேர் உயிரிழந்துள்ளது டன், 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக வும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லையென்பதுடன், இதுவரையில் எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

செனகலில் கடந்த 3 தசாப்தங்களுக்கும் மேலாக பிரிவினைவாதக் கிளர்ச்சி நீடித்து வருகின்றது. இந்நிலையில், சுதந்திரத்தைக் கோரும் காசமன்ஸ் பகுதியில் அரசாங்கப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் முறுகல் நிலைமை இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




82

பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

திருமதி சின்னத்தம்பி மனோன்மணி






அம்மா! அன்பு என்றும் நிலைத்திட
ஆசைகள் யாவும் நிறைவேறிட
இடர்கள் அனைத்தும் அழிந்திட
என்றும் உள்ளத்தில் குழந்தையாய்
தோற்றத்தில் இளமையாய்
நோய் நொடி அற்று
உம் பிள்ளைகள் எம்முடன்
நீங்கள் நூற்றாண்டு வாழ்ந்திட
வாழ்த்துகின்றோம்
மகத்தான இந்நாளில்...

(2288)

ஆவரங்கால் கிழக்கு,
மனறப்பகுதி,
புத்தூர்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி ஆசிரியருக்கு பதில் மடல்



## -கம்பவாரிதி இ.ஜெயராஜ்-

(நேற்றைய தொடர்ச்சி)

வென்றவனை வழி மொழிவதுதானே நம் மக்களின் இயல்பு. அப்படியிருந்தும் கூட எங்களின் உண்மையை உணர்ந்து, கடைசிவரை எங்களோடு மரியாதையாய் நடந்து கொண்ட புலிகளின் செயலிலும், சத்தியத்தின் வலிமையை நான் தெரிந்து கொண்டேன். இவற்றையெல்லாம் என் பெருமைக்காக நான் இங்கு உரைக்கவில்லை.

என் துணிவையும், நேர்மையையும் நீங்கள் பாராட்டி எழுதியிருந்தீர்கள். அத்துணிவு எங்ஙனம் எனக்குக் கிடைத்தது என்பதனை உரைக்கவே, மேற்சொன்ன பழைய விடயங்களைப் பதிவு செய்யவேண்டி வந்தது. சத்திய நம்பிக்கை என்பது எவருக்கும் திடீரென வந்துவிடாது. வாழ்க்கை அனுபவங்கள்தான், சத்தியத்தின் மீதான அந் நம்பிக்கையை மெல்ல மெல்ல உறுதிசெய்து, எம்மை நிமிர்வோடு நிற்கச் செய்கின்றன. அங்ஙனமே இயற்கை என்னைச் சூழ்ந்த சிலரைக் கொண்டு, என் மனத்தில் சத்தியத்தின் மீதான நம்பிக்கையை உருவாக்கித் தந்தது. அச்சத்தியமே என் நிமிர்வின் அடிப்படை.

இன்று, தம் விருப்பிற்கேற்ப நான் எழுதுவதில்லை என்றும் பேசுவதில்லை என்றும், என்னைக் கடுமையாக, சிலர் திட்டித்தீர்க்கிறார்கள். அவர்கள் மீதும் எனக்குப் பகை உருவாகாதது கண்டு நானே ஆச்சரியப்படுவேன். போற்றுகிறார்களோ, தூற்றுகிறார்களோ அவர்கள் பற்றி கவலைப்படாமல், என் மனதிற்குச் சரியெனப்பட்டதை சமுதாயத்திற்கு உரைக்கவேண்டும், இவ் எண்ணத்தை இயற்கையே உருவாக்கித்தந்தது. அந்த அனுபவத்தைத்தான் நீங்கள் பாராட்டுகிறீர்கள். உங்கள் பாராட்டு, உண்மையை மதிக்க நம் மண்ணில் இன்னும் ஒருசிலர் இருக்கிறார்கள் எனும், நம்பிக்கையைத் தந்து என்னை மேலும் தெம்பூட்டுகிறது. அதற்காக ஆயிரம் தரமாய் உங்களுக்கு நன்றி உரைக்கிறேன்.

மேற்சொன்னவை என் மகிழ்ச்சிக்கான காரணங்கள். இனி எனது கவலைக்கான காரணம் பற்றி சில உரைக்கப்போகிறேன். நீங்களும் மன நடுநிலையோடு விருப்பு வெறுப்பைத் தவிர்த்து, தர்க்க நியாயங்களை அங்கீகரித்து, என் கருத்துக்களை ஆராய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து எழுதுகிறேன்.

உங்கள் தலையங்கத்தின் முடிவில் தேர்தல் காலத்தில் சரியான தலைமையை நான் இனங்காட்ட வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து, தமிழ் மக்களுக்குப் பொருத்தமான தலைவர் என்றால், அது வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனாக மட்டுமே இருக்க முடியும் என்றும், அவரிடம் இருக்கக்கூடிய நேர்மையும் நீதியும் ஆத்மபலமும், தமிழ்மக்களின் அரசியல் பயணத்திற்கு வழிகாட்டும் என்றும் எழுதி, அதற்காக நானும் அறைகூவல் விடுக்கவேண்டும் என்றும் எழுதியிருந்தீர்கள். பல விடயங்களில் உங்களோடு நான் ஒத்துப்போனாலும், இந்த விடயத்தில் மட்டும் உங்களோடு ஒத்துவர என் மனம் மறுக்கிறது. அதற்கான காரணங்களை இனி எழுதுகிறேன்.

நீதியரசர் எங்கள் கழகத்தின் பெருந்தலைவராக பதினைந்தாண்டுகளுக்கு மேலாகச் செயலாற்றியவர். என்மேல் தனிப்பட்ட மதிப்பும் அன்பும் கொண்டவர். எங்கள் கழகத்தின் பெருந்தலைவராக அவர் இருந்தபோது, அவரது பெருமைக்கு எவ்வித மாசும் வராமல் நாம் பார்த்துக் கொண்டோம். முதலமைச்சராக அவர் வரவேண்டுமென, பத்திரிகைகளிலும் மேடைகளிலும் துணிந்து குரல் கொடுத்தவன் நான். அப்போது அறிவுத்துறை சார்ந்த பலரும், அக்கோரிக்கையில் தங்களை அடையாளப்படுத்த விரும்பவில்லை. முதலமைச்சர் கண்ணியமானவர் என்பதில் எனக்கு இன்றும் நம்பிக்கை உண்டு. அவர் பெருமை தெரியாத யாரோ சிலர் அவரைப் பிழையாய் வழிநடத்தி, மதிப்புக்குரிய அவரை இன்று மதிப்பிழக்கச் செய்திருக்கிறார்கள் என்பதே என்கருத்து. இன்றும் அவர்மேல் தனிப்பட்ட வகையில் எந்தவிதமான பகையும் எனக்கில்லை. ஆனால் சமுதாய நலம் நோக்கி மிக நிதானமாகச் சீர்தூக்கியே, அவர் மீதான எனது விமர்சனங்களை முன்வைத்து வருகிறேன்.

இன்றுவரை அவரோ அவரைச் சார்ந்தவர்களோ, அந்த விமர்சனங்களை எவ்விதத்திலும் சரியான முறையில் எதிர்கொள்ளவில்லை. அது அவர்கள் பிரச்சினை! வயது அறுபதைத்தாண்டி முதியோர் வரிசையில் சேர்க்கப்பட்ட இன்றைய நிலையில், யரர் ஏற்கிறார்களோ இல்லையோ சமுதாய நலன் நோக்கிய எனது கருத்துக்களை, முன்வைக்கவேண்டியது என் கடமை என்று கருதியே, முதலமைச்சர், சம்பந்தன் ஐயா, சுமந்திரன் போன்ற பலரின் செயற்பாடுகள் மீதான, எனது கருத்துக்களை பகிரங்கமாய் எழுதி வருகிறேன்.

'ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்' என்ற, சுமந்திரன் பற்றியதான எனது கடும் விமர்சனத்தைப் பார்த்துவிட்டு, நான் உங்கள் அணியில் இனிச் சேர்ந்து விடுவேன் என நீங்கள் நினைத்திருப்பது தெரிகிறது. தயைகூர்ந்து மன்னியுங்கள்!அப்படி நீங்கள் நினைத்திருந்தால் அது மிகப் பெரிய தவறு. ஒருவர் மீதான கோபத்தை இன்னொருவர் மீதான விருப்பாக, நீங்கள் எப்படிக் கணித்தீர்களோ தெரியவில்லை! இப்போதும் தெளிவுபட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து, ஆயுதப் போராட்டத்தில் தோல்வியுற்று நிற்கும் இன்றைய நிலையில், உலக நாடுகளின் நிரந்தரம் இல்லாத ஆதரவை மட்டுமே நம்பி இருக்கிறோம் நாம். இந் நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை, யதார்த்தம் உணர்ந்து, சரியான வழியில் முன்னெடுக்கும் தகுதியில், இன்றும் சுமந்திரன் தான் முன் நிற்கிறார் என்பது, என்னுடைய முடிவான கருத்தாகும். அத்தகுதியை வைத்து ஜனநாயக மரபுகளை மீறி, தான்தோன்றித்தனமாக 'என்னைக் கேட்பார் எவரும் இல்லை' எனும் நினைப்போடு, மக்கள் உணர்வைக்கூட மதிக்காமல்,பேசியும் எழுதியும் செயற்பட்டும்வரும் அவரது போக்கைத்தான் நான் கண்டிக்கிறேன். தயைகூர்ந்து இதை உணர்ந்து கொள்ளுங்கள். அவரது இந்த சர்வாதிகாரப் போக்கில் இனப்பற்றும் மக்கள் ஆதரவும் இல்லாத, பல சுயநலவாதிகள் பயனும் பதவியும் பெற்று மேலெழுவதும், இனப் பற்றாளர் பலர் கீழிறக்கப்படுவதுமே எனது வெறுப் பின் அடிப்படைகள். கேள்வியின்றித் தன்னை ஆதரிக்கும் பொய்மையாளர்களை, சூழ வைத்திருப்பதை பலம் என்று கருதுகிறார் அவர். அதுதான் பலயீனம் என்பது அவருக்குத் தெரியவில்லை. அமிர்தலிங்கம், பிரபாகரன் போன்றோரது வீழ்ச்சியைக் கண்டபிறகும், வரலாற்றுப் பாடம் படிக்காத அவர்மேல் எனக்குக் கோபம் வருகிறது. அதனால் தான் அவரைக் கண்டித்தேன். சுமந்திரன் மீதான எனது கண்டிப்பை முதலமைச்சர் மீதான ஆதரவாக, தயைகூர்ந்து வியாக்கியானம் பண்ணிக் கொள்ளவேண்டாம் என, தாழ்மையாகத் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். சுமந்திரன் மீதோ, முதலமைச்சர் மீதோ, எனக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் இல்லை. இது என் நிலை பற்றிய பிரகடனம். சமூக வாழ்வுக்கு வந்த நீங்களும் இங்ஙனமே இருக்க வேண்டுமென, நட்பின் உரிமையால் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இனி முதலமைச்சர் பற்றியதான உங்களது கோரிக்கையை, நான் ஏற்க முடியாததற்கான காரணங்களை வரிசைப்படுத்துகி றேன். கடந்த நான்கு ஆண்டுகால அரசியல் செயற்பாடுகளில், தன் தலைமைத் தன்மைய்யை எந்தவிதத்திலும் நிரூபிக்காமல், முழுத்தோல்வி அடைந்திருக்கிறார் முதலமைச்சர். அவர்மீதான பற்றினால் இக் கருத்து உங்களை வெறுப்படையச் செய்யலாம். காரணமின்றி எந்தக் கருத்தையும் நான் முன்வைக்க மாட்டேன். என் மனத்திருக்கும் காரணங்களைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்.

- தன்னை மதித்து வரவேற்றுப் பதவி தந்த அமைப்பை ஒன்றரை வருடகாலத் திற்குள் வெறுத்து, அடுத்து வந்த தேர்த லில் அவர்களுக்கு எதி ராக மறைமுகமாய்ச் செயற்பட்டு குழப்பம் உண்டாக்கிய, முதல மைச்சரின் செயலில் அவரது நன்றியின்மை வெளிப்பட்டது.
- 'இன அழிப்புச் செய்த ஜனாதிபதி மகிந்தவின் முன் பதவி ஏற்கமாட்டேன்' என்று பகிரங்கமாய் அறிவித்துவிட்டு அவரை நம்பி மற்ற உறுப்பி னர்கள் அக்கொள்கையைப் பின்பற்ற திடீ ரென அதே ஜனாதிபதியின் முன் தன் குடும்பத்தாருடன் மட்டும் சென்று பதவி யேற்றதில் அவரது கருத்தின் உறுதியின்மை வெளிப்பட்டது.
- இவர்களை வெறுக்க இது காரணம்! இவர்களை ஆதரிக்க இது காரணம்! இவர்கள்தான் என் கருத்தில் தலைமைக்குரியவர்கள்! இவர்கள் பின்னால்தான் நான் நிற்கிறேன்! அதனால் முன்னவர்கள் தந்த பதவியை உடன் உதறுகிறேன். என்று, இன்றுவரை சொல்லவும் செயற்படவும் துணிவில்லாது, பொதுப்படப்பேசிவரும் அவரது செயலில், அவரது ஆளுமையின்மை வெளிப்பட்டது.
- இந்தியச் சிறைகளிலும் இலங்கைச் சிறைகளிலும் நம்மவர் பலர் வாடி இருக்க, முதலமைச்சராய் ஆன பின்பு இந்திய நீதிமன்றால் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட தனது குருநாதர் பிரேமானந்தரது சீடர்களை விடுவிக்குமாறு இந்தியப்பிரதமருக்கு முதல்முதலாய்க் கடிதம் எழுதியதில் அவரது சுய உணர்வால் ஏற்பட்ட நீதியின் மீதான நம்பிக்கையின்மையும் இனப் பற்றின் மையும் வெளிப்பட்டன.
- சுன்னாகக் கிணறுகளில் பெற்றோலியம் கலந்த தாய்ச் செய்தி வந்தபோது மக்களின் உயிரைப் பாதிக்கக் கூடிய அவ்விடயத்தை ஆராய்வதில் எடுத்துக்கொண்ட தேவையற்ற நீண்டகால அவகாசத்திலும் பின்னர் த்னக்குப் பிடித்த அமைச்சர் நீரில் எதுவும் கலக்கவில்லை என வெளியிட்ட முடிவோடு உடன்பட்ட பொய்மை யிலும் (பின்னர் அது கலந்தது உண்மை என மத்திய அமைச்சர் உறுதிசெய்தார்.) அவரது மக்கள் மீதான அக்க, றையின்மையும் தன்னைச் சார்ந்தவர்களின் பிழைகளை மூடி மறைக்கும் பொய்மையும் வெளிப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள் -2018



எதையும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் மிதுன இராசி வாசகர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு. வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் விதத்தில், உங்களின் கிரகங்கள் சாதகமான நிலையிலேயே சஞ்சரிக்கின்றன. வருடத் தொடக்கத்தில் சனியின் பார்வையும், குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. சனியின் பார்வையால் வரும் கடுமையான பலன்களை, குருவின் மேற்கொண்டால், பொன்னான வாழ்க்கை அமையும்.

புத்தாண்டின் தொடக்க நிலை!

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்தில் சஞ்சரிக்கும்பொழுது யோகத்தை வழங்குவார். எனவே பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அருளாளர்கள் மற்றும், ஆன்மீகவாதிகளின் ஆலோசனைகள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும்.

குருவின் பார்வை உங்கள் இராசியைப் பார்ப்பதோடு 9 மற்றும் 11 ஆகிய இடங்களையும் பார்க்கிறது. இராசியை குருதான் பார்த்தால், யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தனித் தொழில் வாய்க்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வேலை கிடைக்கும் வாய்ப்பும் அமையும். நண்பர்கள் உங்கள் தொல்லை தீர வழி வகுப்பர். அரசியலில் உள்ளவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து சேரும்.

ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை 1,4,9 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி ஏற்பட்டாலும், மாற்று மருத்துவத்தால் அதனைச் சீராக்கிக் கொள்வீர்கள். சிந்தனையைச் சிதற விடாமல் ஒருமுகப்படுத்தி பணி மீதியும் தொடரும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர். முகத்தில் பொலிவும், அகத்தில் தெளிவும் ஏற்படும். வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

குருவின் அதிசார காலமும், வக்ர காலமும்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு விருச்சிக இராசியில் அதிசாரம் பெறுகிறார். 7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் மார்ச் 9 ஆம் திகதி வரை விருச்சிக இராசிக்குள் குரு-செவ்வாய் சேர்க்கை ஏற்பட்டு குரு-மங்கல யோகத்தை உருவாக்குகிறது. இக்காலத்தில் துவண்டு கிடந்த தொழில் துளிர் விடும். திரண்ட




செவ்வாய்க்குரிய சிறப்பு வழிபாடுகளைச் செய்யுங்கள்.

காளியம்மன், கரும்மாரியம்மன், ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்கள் வீற்றிருந்து அருள்வழங்கும் ஆலயங்களில், உங்களுக்குப் பொருத்தமான ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டால் நன்மைகள் வந்து சேரும்.

வளர்ச்சி தரும் வழிபாடு!

'ஓம் நமோ நாராயணாய நமஹ' என்று உங்களுக்கு அதிர்ஷ்டம் தரும் எண்களின் ஆதிக்கத்தில் தினமும் எழுதலாம். மேலும் புதன்கிழமை தோறும் பெருமாளையும், இலட்சுமியையும் வழிபட்டால் பெருமைகள் வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சியும், உச்சமும்!

உங்கள் இராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஜனவரி 20 ஆம் திகதி முதல் மார்ச் 10 ஆம் திகதி வரை தன் சொந்த வீடான விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். பார்க்கும் மருத்துவத்தை மாற்றிப் பார்க்கலாமா? என்று சிந்திப்பீர்கள். உயர் பதவியில் இருப்பவர்கள் உங்களுக்குப் பகையாவர்.

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர்

## குருவும் சனியும் பார்ப்பதால் குழப்பமும் மகிழ்ச்சியும் இணைந்து வரும்

பார்வை சாந்தப்படுத்தி விடும். எனவே வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி வந்து கொண்டேயிருக்கும். உழைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நேரம் இது. காரணம்.. சனி, சப்தம பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கிறார். கண்டகச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. நீங்கள் கடமையை சரிவரச் செய்தாலும், அதில் பிழை கண்டுபிடிக்க சிலர் உங்கள் அருகிலேயே இருப்பார்கள். அதற்கெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. குருவின் பார்வை பரிபூரணமாக உங்கள் இராசியில் பதிவதால், உங்களது ஆற்றல் பளிச்சிடும். புது முயற்சிகளில் ஒரு முறை தடையைச் சந்தித்தாலும், மறுமுறை வெற்றி கிடைக்கும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உள்ள கிரக நிலைகளை ஆராய்ந்து பார்த்தால் 2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். 2இல் ராகு நின்றால் திரண்ட செல்வம் வரும். ஆனால் அந்தப் பணத்தைச் சேமிக்க விடாமல் செய்யும் விதத்தில் கேதுவின் சஞ்சாரம் அஷ்டமத்தில் இருக்கிறது. ஆன்மீகத்திற்காகவும் செலவிடுவீர்கள் அரசியலுக்காகவும் செலவிடுவீர்கள் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ளவும் செலவிடுவீர்கள்.

6 ஆம் இடத்தில் புதன் மறைந்திருப்பதால் உத்தியோக மாற்றங்களும், பணியாளர் ஒத்துழைப்பும் கிடைக்கும். குரு-சுக்ர பரிவர்த்தனையோடும், குரு-மங்கல யோகத்தோடும், குரு- சந்திர யோகத்தோடும் தொடங்கும் இந்தப் புத்தாண்டு குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகளைக் கொடுத்து மனதை மகிழ்விக்கப் போகின்றது.

இருப்பினும் உங்களின் சுய ஜாதகத்தில் உள்ள கிரகங்களின் ஆதிக்க பலமறிந்து, புத்தாண்டு கிரக நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்து, பரிகாரங்கள், வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. எதிர்மறை சிந்தனைகளை விலக்குவதன் மூலம் இனிய பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும், மின்சாதனப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கி மகிழலாம். உறவினர்களின் ஆதரவு குறையாதிருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிப்பதால் வறண்ட நிலை மாறி வளர்ச்சி வந்து சேரும். இருப்பினும் மன அமைதி குறையத்தான் செய்யும். பிள்ளைகளால் அடிக்கடி தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். அசையாச் சொத்துகள் வாங்கியதில் சிக்கல்கள் உருவாகலாம். எனவே நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது.

குருப்பெயர்ச்சிக் காலம்!

ஆண்டின் தொடக்கத்தில் 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 6இல் குரு வந்தால் ஊரில் பகை என்பார்கள். இருப்பினும் குருவின் பார்வை 2,10,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. அந்த அடிப்படையில் பார்வைக்கு பலன் அதிகம் உண்டு. 4,7,10 ஆகிய கேந்திரங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் மறைவிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல பலன்களை அள்ளி வழங்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். சகோதரர்களின் பகை மாறும். உத்தியோகத்தில் திடீர் உயர்வு கிடைக்கும். வெளிநாடு செல்லும் யோகம் ஒருசிலருக்கு உருவாகும். மேலதிகாரிகளின் ஆதரவு அதிகரிக்கும். சம்பளப் பாக்கிகள் மொத்தமாக வந்து சேரும்.

குருவின் பார்வை பதியும் இடங்களைப் பொறுத்தவரை பலன் அதிகம் கிடைக்கும். பணப் பற்றாக்குறை அகலும். பாதியில் நின்ற செல்வத்தை தெய்வீகப் பணிக்கு கொடுத்து உதவுவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். 7,10-க்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது, அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி காண்பீர்கள். அலுவலகப் பணிகள் அனுகூலமாக நடக்கும். பணியிடத்தில் உள்ளவர்கள் பக்கபலமாக இருப்பர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். கடன்சுமை குறையும். முடங்கிக் கிடந்த தொழில் முழுவேகத்தோடு நடை பெறும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வரை மூல நட்சத்திரக் காலில் தனுசு இராசியில், சனி வக்ரம் பெறுகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாக அமையும். உங்கள் இராசிக்கு 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்ட மாதிபதி வக்ரம் பெறும்பொழுது, இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் கைகூடி வரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். பணியிடத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். இலாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குகிறார். எனவே, தந்தை வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். பெற்றோர்களின் ஆதரவு குறையலாம். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் கூடுதல் சிக்கல்கள் வந்து சேரலாம். சனி- செவ்வாய் சேர்க்கை காலத்தில் சந்தோஷக் குறைவு ஏற்படாமல் இருக்க வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வாக்கு வாதங்களால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவதில் தாமதம் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் சனி, 26 ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார்.

6 இற்கு அதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தனக்குத்தானே பகையாகும் சூழ்நிலை உருவாகும். வியாபாரத்தில் விரோதங்களை வளர விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இதுபோன்ற காலங்களில் அங்காரக வழிபாடும், அனுசரித்துச் செல்லும் சூழ்நிலையும் கைகொடுத்து உதவும். திசாபுத்திக்கேற்ற சிறப்புப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

இந்தப் புத்தாண்டு உங்களுக்குப் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும் ஆண்டாக அமையப் போகிறது. முத்தான வரன்கள் அமையும். மூலதனம் கிடைத்து தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும்.

கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். புகுந்த வீட்டில் உங்கள் புகழ் மேலோங்கும். சொத்துப் பிரச்சினைகளும், சொந்தங்களால் வந்த பிரச்சினைகளும் அகலும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குழப்பங்கள் அதிகரித்தாலும், அதைச் சமாளித்து விடுவீர்கள். பிள்ளைகளால் அமைதிக் குறைவு ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை தீர ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வெளிநாட்டுப் பயணம் திருப்தி அளிக்காமல் போகலாம்.

ஆண்டின் கடைசி இரண்டு மாதங்கள் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால் தான், குடும்பத்தில் அமைதி கிடைக்கும். ராகு-கேது பிரீதியும், குலதெய்வ வழிபாடும் நன்மைகளை வழங்கும்.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அ.தி.மு.க. வெற்றி பெற கிராமம் கிராமமாக பிரசாரம் செய்ய வேண்டும்

### அமைச்சர் உதயகுமார் அறிவுரை



(சென்னை)

உள்ளூராட்சித் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற கிராமம் கிராமமாக பிரசாரம் செய்ய வேண்டுமென்று மாவட்டச் செயளாளர்கள் கூட்டத்தில்அமைச்சர்உதய குமார் அறிவுரை வழங்கி னார்.

அ.தி.மு.க. தலைமை கழகத்தில் ஜெயலலிதா பேரவை சார்பில் மாவட்ட செயலாளர்களுக்கான 'திறன் மேமபாட்டு பயிற்சி முகாம்' 2 நாட்களாக நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 50 பேரவை மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்ட இந்த முகாமை நேற்று முன்தினம் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வமும் ஆரம்பித்து வைத்தனர்.

2-வது நாள் பயிற்சி முகாமை அம்மா பேரவை செயலாளரும், வருவாய்த் துறை அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் ஆரம்பித்து வைத்தார்.

மறைந்த முதல்வர் புரட்சித்தலைவி அம்மா இந்த இயக்கத்தை இந்தியாவிலேயே 3-வது மாபெரும் இயக்கமாக உருவாக்கிகாட்டினார்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக முன்நிறுத்த பாடுபட்டார். அதுமட்டுமல்ல எவராலும் வெல்ல முடியாத மாபெரும் அரசியல் இயக்கமாக அ.தி.மு.க.வை உலக வரலாற்றில்இடம்பெறசெய்தார்.

அவருக்கு நன்றி செலுத்தும் வகையில்அவரதுவழியை பின்பற்றும் முதலமைச்சர் எடப்பாடிபழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம்தலைமையில்நமது வெற்றிப் பயணத்தை தொடர வேண்டும்.

எதிர்வரும் அனைத்து தேர்தலிலும் வெற்றி வாகை சூடும் வகையில், உள்ளூராட்சி தேர்தலில் 100 சதவீதம் அ.தி.மு.க. வெற்றி பெற அச்சாரமாக உங்களுக்கு பயிற்சி வழங்கி உள்ளோம்.

புரட்சித்தலைவி அம்மாவின் சீரிய திட்டங்கள், வளர்ச்சி பணிகள், தொலை நோக்கு திட்டங்களை, அரசின் சாதனைகளை கிராமம் கிராமமாக பட்டி தொட்டி எங்கும் வீடு வீடாக நீங்கள் பிரசாரம் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரண்மனை முன்... சவுதியில் 11 இள...

(ரியாத்)

சவுதி அரேபியாவில் அரண்மனையின் முன் போராட்டம் நடத்த முயன்றதாக 11 இளவரசர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

சீவுதி அரேபியாவில் அரண்மனையின் முன் போராட்டம் நடத்த முயன்றதாக 11 இளவரசர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

உலகின் மிகப்பெரிய எண்ணெய்ஏற்றுமதி நாடான சவுதி அரேபியாவின் மன்னராக சல்மான் (வயது 81) உள்ளார். அவரது மகன் முகமது பின் சல்மான் (வயது 32) பட்டத்து இளவரசராக உள்ளார்.

அனைத்து அதிகாரங்களும் அவரிடம் கொட்டிக் கிடக்கின்றன.

அங்கு அவர் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

கடந்த நவம்பர் மாதம் அங்கு ஊழலை தடுப்பதற்காக அவரது தலைமையில் சிறப்பு குழு ஒன்று அமைகப்பட்டது.

அந்தக் குழு அமைக்கப்பட்ட உடனேயே அங்கு ஊழல் புகார்களின் பேரில் ஒரே நேரத்தில் 11 இளவரசர்கள் கைது செய்யப்பட்டனர். இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் அடுத்த அதிரடியாக அங்கு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கச்சா எண்ணெய் விலை சரிவால், அந்த நாட்டின் பட்ஜெட்டில் 195 பில்லியன் ரியால் (சுமார் ரூ.3 இலட்சத்து 31 ஆயிரத்து 500 கோடி) துண்டு விழுந்துள்ளது. அதை சரிக்கட்டுகிற விதத்தில் மானியங்கள் ரத்து செய்யப்படுகின்றன. மதிப்பு கூட்டு வரி

### சிறையில் அடை...




அமுல்படுத்தப்படுகிறது. மன்னர் குடும்பத்து உறவினர்களின் சலுகைகள் இரத்து செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மன்னர் குடும்ப உறவினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மின் கட்டணம், தண்ணீர் கட்டணம்

# பா.ஜ.கவின் உத்தரவுக்கு அடிபணிவதைவிட சமூக நீதிக்காக மகிழ்ச்சியுடன் சாவேன்

### லாலு பிரசாத் உறுதி

(டில்லி)



பாரதீய ஜனதாவின் உத்தரவுக்கு அடிபணிந்து நடப்பதை விட, சமூக நீதிக்காக, நல்லிணக்கத்துக்காக, என்னை நான் குறிவைத்துக் கொண்டு, மகிழ்ச்சியாக சாவேன் என லாலு பிரசாத் தெரிவித்துள்ளார்.

லாலு பிரசாத்துக்கு கால் நடை தீவன ஊழல் வழக்கில் ராஞ்சி சி.பி.ஐ. தனி நீதிமன்று நேற்று முன்தினம் மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

அதைத்தொடர்ந்து லாலு பிரசாத் சார்பில் அவரது அலுவலகம் டுவிட்டரில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளது.

அதில் அவர், எங்களைப் பின்பற்றி வாருங்கள் இல்லையேல் உங்களை குறி வைப்போம் என்ற பாரதீய ஜனதாவின் உத்தரவுக்கு அடிபணிந்து நடப்பதை விட, சமூக நீதிக்காக, நல்லிணக்கத்துக்காக, சமத்துவத்துக்காக என்னை நான் குறிவைத்துக் கொண்டு, மகிழ்ச்சியாக சாவேன் என்று பதிவிடப்பட்டுள்ளது. (இ-7)

# அமெரிக்கா- மெக்சிக்கோ எல்லைச்சுவரை விரிவுபடுத்த 18 பில்லியன் டொலர்களை முதலீடு செய்கிறார் அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

அமெரிக்கா- மெக்சிக்கோ இடையே எல்லைச் சுவரை விரிவுபடுத்த சுமார் 18 பில்லியன் டொலர்களை 10 ஆண்டுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்கா- மெக்சிக்கோவுக்கு இடையேயான எல்லை ஓரத்தில் சுமார் 1,552 கிலோ மீற்றர்களுக்கு இந்த சுவர் எழுப்பப்படவுள்ளது. இதற்கான பணி 2027 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிறைவடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவில் இருந்து ஆண்டுதோறும் இலட்சக் கணக்கானோர் சட்ட விரோதமாக அமெரிக்காவில் குடியேறுகின்றனர். இதைத் தடுக்க சுமார் 670 மைல் தொலைவுக்கு பல்வேறு வகைகளில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், இரு நாட்டு எல்லையில் ஏறிக்கடக்க முடியாத, நுழைய முடியாத, உயரமான, பெரிய, அழகான எல்லைத் தடுப்புச் சுவர் எழுப்பப்படும் என்று அறிவித்தார்.

இதற்கான ஒப்பந்தங்களில் கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

மேலும் கட்டுமானத்திற்கு அமெரிக்க கட்டுமானப் பொருட்களையே பெரும்பாலும் பயன்படுத்தவும் அறிவுறுத்தப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

இந்த எல்லைத்தடுப்புச்சுவரின் செலவுகளை மெக்சிக்கோ ஏற்க வேண்டும் என்று ட்ரம்ப் தேர்தல் பிரசாரத்தில் கூறி வந்தார். ஆனால் மெக்சிக்கோ ஜனாதிபதி இதனை ஏற்க முடியாது என்று கூறியதால். அமெரிக்கர்களின் வரி பணத்தில் இந்தச் சுவர் எழுப்பப்பட இருப்பதாக சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லை தடுப்புச் சுவர் விவகாரத்தில் இரு நாடுகளின் உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொடுக்க மனம் உள்ளது ஆனால் நிதியில்லை

### அமைச்சர் செங்கோட்டையன் கவலை

(கோவை)

போக்குவரத்து தொழிலாளர்கள் கேட்கும் ஊதியத்தை கொடுக்க அரசுக்கு மனம் உள்ளது, ஆனால் போதிய நிதியில்லை என்று அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஊதிய உயர்வு கோரிக்கையை வலியுறுத்தி தமிழக அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் கடந்த 4 ஆம் திகதி வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கினார்.

தி.மு.க. உள்ளிட்ட 14 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த போக்குவரத்து தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனர். இதனால் தமிழகம் முழுவதும் பேருந்துப் போக்குவரத்து முடங்கி உள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான பேருந்துகளே ஓடுவதால் அவற்றில் பயணிகள் கூட்டம் மிகவும் அதிகமாக உள்ளது.

மூன்றாவது நாளாக தொழிலாளர்கள் போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில், தமிழக அரசு இறங்கி வர மறுக்கிறது. இந்நிலையில், கோபிசெட்டிபாளையத்தில் பேட்டியளித்த அமைச்சர் செங்கோட்டையன் கூறியதாவது.



அரசு கடும் நிதி நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. தொழிலாளர்கள் கேட்கும் ஊதியத்தை கொடுக்க அரசுக்கு மனம் உள்ளது. ஆனால் நிதியில்லை என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# விலைவாசி உ... 1000 ரியா...

(ரியாத்)

சவுதி அரேபியாவில் எரிபொருள் விலையேற்றம், வட் வரி போன்றவற்றால் கிடுகிடுவென்று அதிகரித்து வரும் விலைவாசி உயர்வை சமாளிக்க அரசுப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் 1000 ரியால் உதவிப்பணம் அளிக்க மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க வளைகுடா நாடுகளான சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அமீரக அரசுகளின் வருமானத்தின் பெரும் பகுதி எண்ணெய் ஏற்றுமதி மூலமாக வருகிறது. வருமான வரி மற்றும் இதர பொருட்களின் மீதான வரிகள் விதிக்கப்படாத நிலை இத்தனை காலமும் மேற்கண்ட நாடுகளில் இருந்து வந்தது.

இந்நிலையில், பெற்றோலிய பொருட்களின் விலைகள் சர்வதேச சந்தையில் சரிவடைந்ததால் சவுதி அரேபியாவில் நலிவடைந்துவரும் பொருளாதாரத்தை நிமிர்த்திட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடங்கியுள்ளது. உணவுப் பொருட்கள்,மின்னணு பொருட்கள், தொலைபேசி கட்டணம், தண்ணீர், மின்சார கட்டணம், ஹோட்டல் ஆகியவற்றுக்கு 5 சதவிகிதம் அளவுக்கு புதிய வட் (மதிப்பு கூட்டு) வரி 1-1-2018 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், நாளுக்குநாள் அங்கு விலைவாசி உயர்ந்து வருகிறது. விலைவாசி உயர்வை சமாளிக்க அரசுப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் 1000 ரியால் உதவிப்பணம் அளிக்க சவுதி மன்னர் சல்மான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். இந்த உதவிப்பணம் இராணுவத்தில் பணியாற்றுபவர்களுக்கும் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், மாணவ-மாணவிகளுக்கான உதவித்தொகையில் 10 சதவீதம் அளவுக்கு உயர்த்தி வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் ஆர்ப்பாட்டம் வரசர்கள் கைது!

## டைக்க உத்தரவு



நிறுத்தப்பட்டன.

இது மன்னர் உறவு குடும்பங்களில் சலசலப்பை ஏற்படுத்தி வந்தன. இதை எதிர்த்து போராடுவது என மன்னர் குடும்ப உறவினர்கள் முடிவு செய்தனர்.

இந்த நிலையில், அங்கு ரியாத் நகரில் உள்ள காசிர் அல் ஹாகிம் அரண்மனையின் முன்பாக 11 இளவரசர்கள் போராட்டம் நடத்தும் நோக்கத்தில் அணி திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இது அங்கு மிகவும் அபூர்வமான சம்பவமாக பார்க்கப்படுகிறது.

11 இளவரசர்களையும் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு மன்னர் தர்ப்பில் உத்தரவிடப்பட்டது. ஆனால் அவர்கள் அந்த உத்தரவை ஏற்று அங்கிருந்து கலைந்து செல்ல மறுத்து விட்டனர்.

இதையடுத்து அவர்களை கைது செய்யுமாறு மன்னர் குடும்பத்தை காக்கிற தேசிய பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

அவர்கள் உடனடியாக 11 இளவரசர்களையும் கைது செய்தனர். அவர்கள் ஹாயிர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ரியாத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள இந்த சிறை, உச்சக்கட்ட பாதுகாப்பு அம்சங்களை கொண்டது ஆகும். இங்குதான் குற்றவியல் வழக்குடன் தொடர்புடைய குற்றவாளிகள், போராளிகள், அல்கொய்தா பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பறிக்கப்பட்ட மின் கட்டணம், தண்ணீர் கட்டணத்தை திரும்ப வழங்க வேண்டும் என்பதுடன், மரண தண்டனை விதிக்கப்பட்ட தங்களது உறவினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தித்தான் 11 இளவரசர்களும் போராட்டத்தில் ஈடுபட முயன்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# கனடா விமான நிலையத்தில் விமானங்கள் மோதி விபத்து

## பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்



(டொரண்டோ)

கனடா விமான நிலையத்தில்விமானங்கள் மோதி தீப்பிடித்த விபத்தில் பயணி கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

கனடா தலைநகர் டொராண்டோவில் பியர்சன் விமான நிலையம் உள்ளது. அங்கு மெக்சிகோவில் இருந்து வந்த வெஸ்ட்ஜெட் ஏர்லைன்ஸ்நிறுவனத்துக்கு சொந்தமான பயணிகள் விமானம் நேற்று முன்தினம் மாலை தரை இறங்கியது. இதில் 168 பயணிகள் மற்றும் 6 விமான சிப்பந்திகள் இருந்தனர். விமானத்தில் இருந்து கீழே இறங்க அனைவரும் தயாராக இருந்தனர். அப்போது அருகே காலியாக இருந்த சன்விங்நிறுவன விமானம் மீது மோதியது. இதில் வெஸ்ட் ஜெட் விமானத்தின் வால் பகுதியில் தீப்பிடித்து எரிந்தது.

இதனால் விமான நிலையத்தில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. உடனே தீயணைப்பு படையினரும், மீட்புக் குழுவினரும் விரைந்தனர். அதற்குள் விமானத்தின் அவசர வழிகள் திறக்கப்பட்டு பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இதனால் அனைவரும் காயமின்றி உயிர் தப்பினர். (இ-7)

# சி உயர்வை சமாளிக்க பால் உதவிப்பணம்

## சவுதி மன்னர் உத்தரவு



# இராணுவ அமைச்சரிடம் ரூ.10 கோடி கேட்டு தீவிரவாதி ஹபீஸ் சயீத் மானநஷ்ட வழக்கு

(இஸ்லாமாபாத்)

மும்பை தொடர் குண்டு வெடிப்பு தாக்குதல் குற்றவாளியான தீவிரவாதி ஹபீஸ் சயீத், பாகிஸ்தான் இராணுவ அமைச்சரிடம் ரூ.10 கோடி கேட்டு மானநஷ்ட வழக்கு தொடரப்போவதாக நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.


தீவிரவாதத்தை ஒழிப்பதாக நடித்துவரும் பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசு அண்மையில் கடுமையான கண்டனம் தெரிவித்திருந்தது.

தீவிரவாத ஒழிப்பு மற்றும் நாட்டின் உட்கட்டமைப்பு என்ற பெயரில் அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் ஏராளமான நிதி உதவிகளை பெற்று பயனடைந்து வந்துள்ளது.

ஆனால், தீவிரவாதிகளுக்கு எதிரான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் பாகிஸ்தான் அரசு எடுக்கவில்லை என அமெரிக்க அரசு குற்றம் சாட்டி வருகிறது. பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட இருந்த சில நிதியுதவிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த 15 ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு 33 பில்லியன்டொலர்களை வாரி வழங்கிய அமெரிக்க தலைவர்களை பாகிஸ்தான் முட்டாள்களாக நினைத்து விட்டது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆவேசமாக அறிவித்தார்.

இந்த ஆண்டில் முதன் முறையாக டுவிட்டர் பக்கத்தில் புத்தாண்டு தினத்தன்று ட்ரம்ப் வெளியிட்டுள்ள முதல் பதிவில் 'கடந்த 15 ஆண்டுகளாக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா முட்டாள்தனமாக 33 பில்லியன் டொலர்களுக்கு மேல்வழங்கியுள்ளது. ஆனால், நமது தலைவர்களை முட்டாள்களாக நினைக்கும் பாகிஸ்தான் பொய், வஞ்சகம் ஆகியவற்றை தவிர நமக்கு வேறு எதையும் அளித்ததில்லை. ஆப்கானிஸ்தான் மண்ணில் நாம் வேட்டையாடிவரும் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலமும் அளித்து வருகிறது' என அவர் குறிப்பிட்டிருந்தார்.



மேலும், பாகிஸ்தான் பாதுகாப்புக்கு அமெரிக்க அரசால் அளிக்கப்படவிருந்த நிதியையும் அவர் நிறுத்தி வைத்தார்.

இதனால், கலக்கமடைந்த பாகிஸ்தான் அரசு மும்பை தொடர் குண்டு வெடிப்பு தாக்குதல் குற்றவாளியான தீவிரவாதி ஹபீஸ் சயீத் தலைமையிலான ஜமாத் உத்தாவா இயக்கத்துக்கு யாரும் நிதியுதவி செய்யக் கூடாது என உத்தரவிட்டுள்ளது.

அப்பாவி பாடசாலைப் பிள்ளைகள் மீது தீவிரவாதிகள் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தாத வகையில் ஜமாத் உத்தாவா உள்ளிட்ட இயக்கங்களின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் குர்ரம் தஸ்த்கீர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இப்படி பொறுப்பற்ற முறையில் பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் வெளியிட்ட அறிக்கையால் தனது கட்சிக் காரரான ஹபீஸ் சயீதின் நன்மதிப்புக்கு மிகப் பெரிய களங்கம் நேர்ந்து விட்டதாகவும், இதற்கு இழப்பீடாக 10கோடி ரூபாய் அளிக்க வேண்டும் என்றும்சட்டத்தரணி தோஹர் என்பவர் பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் குர்ரம் தஸ்த்கீருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இந்த நோட்டீஸ் கிடைத்த 14 நாட்களுக்குள் ஹபீஸ் சயீதிடம் இராணுவ அமைச்சர் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லை என்றால், இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கும் குற்றவியல் சட்டத்தின்படி உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## மாயமான விமானம்

# மீண்டும் தேடுதலுக்கு மலேசிய அரசு அனுமதி

(கோலாலம்பூர்)

மூன்றாண்டுகளுக்கு முன்னர் 239 பேருடன் மாயமான விமானத்தை மீண்டும் தேடும் அமெரிக்க நிறுவனத்தின் பணிக்கு மலேசிய போக்குவரத்துத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளார்.

மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் இருந்து சீன நாட்டின் தலைநகரான பீஜிங் நகருக்கு 8-3-2014 அன்று 227 பயணிகள்மற்றும் விமானிகள் உள்ளிட்ட 12 பணியாளர்களுடன் புறப்பட்டு சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 777 ரக விமானம் (எம்.ஹெச். 370) இந்திய பெருங்கடலுக்குள் விழுந்தது

இதையடுத்து, அந்த விமானத்தை தேடும் பணியில் விமானங்கள், கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் ஆகியவை ஈடுபடுத்தப்பட்டன. அவுஸ்திரேலியக் கடற்படை கப்பல் 'ஓஷன் ஷீல்ட்' மற்றும் எச்.எம்.எஸ் 'எக்கோ' என்ற இரண்டு கப்பல்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இதுதவிர மேலும் பல தனியார் நிறுவனங்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன.

ஆனால், 1046 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையில் எந்த பலனும் கிடைக்காத நிலையில் தேடும் பணியை இத்துடன் நிறுத்தி கொள்வதாக மலேசியா, சீனா மற்றும் அவுஸ்திரேலிய அரசுகள் அறிவித்தன. இந்நிலையில், அமெரிக்காவை சேர்ந்த ஒரு நிறுவனம் 'கண்டுபிடித்தால் பணம் - இல்லாவிட்டால் சேவை இலவசம்' என்னும் ஒப்பந்த அடிப்படையில் இந்திய பெருங்கடல் பகுதியில் மாய்மான அந்த விமானத்தை தேட முன்வந்து விருப்பம் தெரிவித்தது.

இந்த பணிக்காக 'ஓசியன் இன்பினிட்டி' என்னும் அந்த நிறுவனத்துக்கு சொந்தமான அதிநவீன கப்பல் தென்னாபிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் இருந்து கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தப் பணிக்கு மலேசிய போக்குவரத்து துறை அமைச்சர் லியோவ் டியாங் நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கடல் எல்லைக்கு உட்பட்ட கடல் பகுதியில் சுமார் 25 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் தேடுதல் வேட்டையில் ஈடுபட 'ஓசியன் இன் பினிட்டி' நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக ஈழ அகதிகள் முகாம்களில் மத்திய அரசு அதிகாரிகள் திடீர் ஆய்வு

## மாநில அதிகாரிகளிடையே பதற்றம்

**(சென்னை)**

**தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்கள் சிலவற்றில், இந்திய மத்திய அரச அதிகாரிகள் குழுவொன்று நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டுள்ளது. இதனால் மாநில அரச அதிகாரிகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ரெங்கபுரம் அகதிகள் முகாமில் மத்திய அரசு அதிகாரிகள் திடீர் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அவர்கள் முகாமில் தங்கியுள்ள அகதிகள் மற்றும் அதனை நிர்வகிக்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, மத்திய அரச அதிகாரிகளிடம் அகதிகள் சில மனுக்களை கையளித்துள்ளனர்.

தமது உடைமைகளுடன் தாயகம் திரும்புவதற்கு, மத்திய அரசாங்கம் கப்பல் போக்குவரத்து வசதிகளை செய்து தர வேண்டும் என்று அகதிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தாயகம் திரும்பும் அகதிகள், தாம் புலம பெயர்வதற்கு முன்பு அனுபவித்த வாழ்வாதார உரிமைகள் மற்றும் வசதிகள் மீளக் கிடைப்பதை இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அகதிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தங்கியிருக்க விரும்பும் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு முறையான கழிப்பிட, வீதி, மின்சார வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பு



(கொழும்பு)

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராக பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. காலிமுகத்திடலில் சுதந்திர தின பிரதான அணி வகுப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக, பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் மற்றும் எடின்பரோ கோமகன் இளவரசர் பிலிப் ஆகியோரின் இளைய மகனான இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக, இலங்கை உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக இளவரசர் எட்வேர்ட்டுக்கு அழைப்பு விடுகக்கப்பட்டது. அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 50 ஆவது சுதந்திர தின 1998ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டபோது, பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக, அவரது மூத்த மகன் இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந் தார்.

அதேவேளை, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் அரச குடும்பத்தினருக்கும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்குமாறு அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

400 ஆண்டுகள் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை, 150 ஆண்டுகள் பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்து, 1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆசியாவின் பொருளாதாரக் கேந்திரமாக இலங்கையை மாற்ற ஜப்பான் உதவும்

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் பொருளாதாரக் கேந்திரமாக மாற்றுவதற்கு ஜப்பான் உதவும் என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தாரோ கோனோ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, அரசியல் உறவுகளை மேலும் பலப்படுத்தும், நம்பிக்கையுடனேயே தாம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருப்பதாக இந்தச் சந்திப்பின் போது ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் அபிவிருத்தி, கண்டி நகர விரிவாக்கம், கட்டுநாயக்க விமான நிலைய விரிவாக்கம், மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் ஆகியனவற்றில் ஜப்பானின் முதலீடுகள் முக்கியத்துவமானது என்று தெரிவித்தார்.

மிதக்கும் திரவ எரிவாயு மின் நிலையத் திட்டம் தொடர்பாக இந்த மாதம் மூன்றாவது வாரத்தில் ஜப்பானுடன் உடன்பாடு கையெழுத்திடப்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக, 500 மெகாவாட் மிதக்கும் திரவ எரிவாயு மின்திட்டத்தையும், எரிவாயு விநியோக குழாய் அமைப்பையும் நிறுவ ஜப்பான் இணங்கியுள்ளது.

அத்துடன், ஜப்பானும் இலங்கையும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்பட முடியும் என்றும், எதிர்காலத்தில் இலங்கையுடன் இன்னும் அதிகமாக நெருக்கத்துடன் பணியாற்ற முடியும் என்று நம்புவதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# நாவலப்பிட்டி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் 6 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

நாவலப்பிட்டி பிரதேசத்தில் பாரவூர்தி ஒன்றின் சாரதி மற்றும் உதவியாளரை தாக்கி 6 இலட்சத்து 19 ஆயிரத்து 600 ரூபா பணத்தைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி குறித்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் ஹெரனை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### யோசனை சொல்ல உரிமை இல்லாதவர்கள்

நல்லதை யாரும் சொல்லலாம்தான். ஆனால் அதைக்கூட நாடி பிடித்துப் பார்த்து விட்டுச் சொல்லவேண்டிய காலம் இது.

சிலர் இதைப்பற்றிக் கவலைப்படாமல் யோசனைகளை வாரி வழங்குவார்கள். வாயை வைத்துக்கொண்டு சும்மா இராமல் தேவையில்லாமல் பிறருடைய பிரச்சினைகளில் மூக்கை நுழைத்து யோசனைகளை வழங்குவார்கள்.

இவர்கள் யோசனைகளில் குறைகளும் இருக்கலாம், நிறைகளும் இருக்கலாம். ஆனால், இவற்றைக் கேட்டுக் கொள்கிறவர்கள் இது இவருக்குத் தேவையில்லாத வேலை என்று எண்ண இடம் தந்து விடக் கூடாது.

யோசனைகளை வாரி வழங்குமுன் நம்மை நாமே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

இந்த மனிதர் எப்படிப்பட்டவர்?

இவரிடம் நாம் வாயை திறக்க வேண்டிய அவசியம் என்ன?

நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இப்போது நிலவுகிறதா?

நமக்கும் அவர்களுக்கும் இடையே நெருக்கமோ குறைந்த பட்சப் பழக்கமோ இருக்கிறதா?

சொல்லுகிற யோசனையைக் கோவப்படாமல் அக்கறையுடன் எடுத்துச் சொல்கிறோமா?

இந்த யோசனையைச் சொல்ல நமக்குத் தகுதி இருக்கிறதா?

நம்மீது அவர்கள் வைத்திருக்கும் மதிப்பு என்ன? நம்மை அவர்கள் யோசனை கேட்டார்களா?

நாம் சொன்னால் அதைச் சரியான தொனியில் எடுத்துக் கொள்வார்களா?

நல்ல நோக்கத்துடன் அதை சொல்கிறோமா?

ஆகிய இந்தப் பதினொரு கேள்விகளுள் ஆறிற்கேனும் ஆம் என்கிற பதில் வருமானால் நமக்கு யோசனை சொல்லத் தகுதி வந்துவிட்டது என்று பொருள்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சரியாகத் தெரியவில்லை என்றால் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் கேடயமாக ஒரே ஒரு கேள்வியையாவது குறைந்த பட்சம் உடையவர்களைக் கேட்க வேண்டும்.

“எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதைச் சொன்னால் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளமாட்டீர்கள்” என்பதே அந்தக் கேள்வி.

இந்தப் பதினொரு கேள்விகளையும் புறக்கணித்துவிட்டுப் போகிறவர்களுக்கு ஒரேயொரு வர்த்தைச் சாட்டை காத்திருக்கிறது.

அது, “உன்னை யாருய்யா கேட்டாங்க? போறியா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு! பெரிசா வந்துட்டாரு, யோசனை சொல்ல!” இது தேவையா?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய உலக முடிவை மீண்டும் பார்க்க முடியும்

(கொழும்பு)

கடந்த 121 நாட்களாக மூடப்பட்டிருந்த சிறிய உலக முடிவினை மீண்டும் சுற்றுலா பயணிகள் பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நுவரெலியா சுற்றுலாத் துறைக்கு கவர்ச்சிகரமான இடமாக பல வருடங்களுக்கு முன்பு நுவரெலியா மாநகர சபை மற்றும் விவசாய திணைக்களத்தால் திட்டமிடப்பட்ட சிறிய உலகமுடிவானது நுவரெலியா-சீதா எலிய நிர்வாக விளைநிலத்துக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்து இங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் 21 சபாரி வாகனங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், இதன்மூலமாகவும் நுவரெலியா விவசாய திணைக்களத்தின் வருமானம் அதிகரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் குறித்த விவசாய நிலங்களின் ஊடான வீதி சேதமடைந்ததன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சபாரி சேவைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும், சுற்றுலாப் பயணிகள் மீண்டும் உலகமுடிவினை பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# நெல்லியடி நகர்ப்பகுதியில் கழிவுத் தொட்டிகள் வைப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி நகர்ப் பகுதியில் கழிவுத் தொட்டிகள் பிரதேச சபைச் செயலாளர் மற்றும் கரவெட்டி வைத்திய அதிகாரி எஸ்.சுதோக்குமார் ஆகியோரால் வைக்கப்பட்டது.

பொதுமக்கள் குப்பை களைத் தரம் பிரித்து பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை ஒரு பகுதியாகவும் கண்ணா டிப் போத்தல்களை ஒரு பகுதியாகவும் உக்கக் கூடிய கழிவு களை ஒரு பகுதியாகவும் பிரித்துப் போட்டு சுற்றாடலை தூய் மையாகப் பேணுமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(இ-60)

## இப்போதைக்கு ஜனாதிபதித் தேர்தல் இல்லை

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் அரசைக் கவிழ்க்க முடியாது

## அமைச்சர் அமரவீர உறுதி



(கொழும்பு)

தற்போதைக்கு ஜனாதி பதித் தேர்தல் நடத்தப்படாது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். உள் ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என அவர் தெரி வீத்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தேசிய ரீதி யான ஓர் தேர்தல் கிடையாது என குறிப்பிட்டுள்ள அவர் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு வரையில் ஜனாதிபதி தேர் தல் நடத்தப்படாது எனவும் தெரிவித்தார்.

இந்த அமைச்சரவை எதிர் வரும் 2020 ஆம் ஆண்டு வரையில் பதவியில் இருக் கும் இந்த தேர்தலில் ஆட் சியை கவிழ்க்க முடியும் என சிலர் செய்து வரும் பிரசா ரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## காலாவதியான தயிர் உண்டவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான உணவை உட்கொண்ட நபரொருவர் ஒவ்வாமையால் கரவெட்டி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி பாற்சாலையில் தயிர் வாங்கி உட்கொண்ட நபர் வயிற்றுப் போக்கு ஏற் பட்டு கரவெட்டி ஆதார வைத் தியசாலைக்குச் சென்றுள்ளார்.

காலாவதியான உணவை உட்கொண்டதால் ஒவ்வாமை ஏற்பட்டு வயிற்றுப் போக்கு ஏற்பட்டுள்ளதாக கண்டறி யப்பட்டு இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ-10-60)

# மரண அறிவித்தல்

## அமரர் இராமு நாகராஜா



யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாக வும் வளலாய், சுவிஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராமு நாகராஜா அவர்கள் 31.12.2017 ஞாயிற்றுக் கிழமை அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராமு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், விஸ்ணரூபி (டென் மார்க்), வசந்தரூபி(டென்மார்க்), நிமலதாஸ் (ரகு- சுவிஸ்), சுசித்திரா (இலங்கை), விசித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுரு (டென்மா ர்க்), காலஞ்சென்ற இந்திரன் (நெதர்லாந்து) மற்றும் தெய்வநாயகி (சுசி- சுவிஸ்), சந்திரசேகரம் (சிறி- பிரான்ஸ்), சிவராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவரூபி (லண்டன்), சிந்துஸ்யா (டென்மார்க்), அனோயன் (டென்மார்க்), கஜீபன் (பிரான்ஸ்), சுஜீபன் (பிரான்ஸ்), சஹானா (இலங்கை), இந்துஜா (டென்மார்க்), இனோயா (டென்மார்க்), இமோலின்(டென்மார்க்), பியுலா (டென்மார்க்), லாவண்யா(பிரான்ஸ்), லவகீன்(பிரான்ஸ்), அதீரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், அஜீகன் (லண்டன்), அக்சயன். (லண்டன்), மீலன்(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை 08/01/2018, மு.ப 10.00.- பி.ப.01.00 Friedhof Feldli, Cemetery, Feldlistrasse 18, 9000 St. Gallen, Switzerland இல் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உற்வினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகவல்:- குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரா மகாதேவா இராஜேஸ்வரி

பிறப்பு:- 05.03.1942 இறப்பு:- 10.12.2017

## 5ஆம் ஆண்டு நினைவில்...

அன்பாய் அரவணைத்து
பூமியில் நாம்
தலை நிமிர்ந்து வாழ்ந்திட
வேராய் இருந்து
நீரைச் சொரிந்த தாயே
உம்மை இழந்து
தவிக்கும் நிலைகண்டு
ஓடோடி வாராயோ?



அமரர் மு.வ.சுப்பிரமணியம் மகாதேவா

பிறப்பு:- 10.07.1937 இறப்பு:-11.05.2013

10.12.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும் பல வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 08.01.2018 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1150)

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாததற்கு
# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே காரணம்

## கூட்டமைப்பு எம்.பி. சிறிநேசன் குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாமல் இழுபட்டுக்கொண்டிருப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே காரணம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.**

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சின்ன ஊறணி நான்காம் வட்டாரத்தில் போட்டியிடும் கந்தசாமி சத்தியசீலனின் தேர்தல் செயற்பாடுகளுக்காக நேற்று முன்தினம் சனிக் கிழமை மாலை தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன இதுவரை காலமும் எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்க வில்லை. தீர்த்து வைப்பதாக கூறி இப்போது ஓரளவிற்கு செயற் பட்டு வருகின்றனர். தீர்த்து வைத்தால் தான் நாம் அவர்களை பற்றி சிந்திக்க முடியும்.

கடந்த காலங்களில் பல்வேறு தவறுகளை செய்தவர்கள் இப்போது எங்களிடம் வாக்குகளை கேட்பதற்கு தகுதியற்றவர்களா வர். நாங்களும் அவர்களுக்கு வாக்களிப்பதற்கு தயாராக இல்லை.

தற்போது படகில் வாக்கு கேட்டுவருகின்றனர். எங்களுடைய மாவீரர்கள் கொள்கைக்காகவும் கோட்பாட்டிற்காகவும் போராடியவர்களாவர்.

அவர்கள் இன்று பல வீனப்படுத்தப்படுவதற்கும் காட்டிக்கொடுக்கப்படுவதற்கும் வேட்டையாடப்படுவதற்கும் யுத்தம் மௌனிக்கப்பட்டதற்கும் காரணம் யார் என்பது உங்களுக்கே தெரியும்.

இப்போது மாவீரர் துயிலும் இல்லங்களில் அவர்களுடைய சமாதிகள் சப்பாத்துக்கால்களினால் இன்று ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதற்கு காரணம் இப்படியானவர்கள்தான். இப்படியான போக்குடையவர்கள் எப்படி எங்களிடமிருந்து வாக்குகளை கேட்க முடியும்?

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும், பசில் ராஜபக்ஷ பொருளாதார அமைச்சராகவும் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் பிள்ளையான் முதலமைச்சராகவும் இருந்த காலம் தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு பொற்காலமாக இருந்தது. இன்றைய நிலையில் எல்லாம் தலைகீழாக மாறி விட்டது.

பசில் ராஜபக்ஷ பொருளாதார குற்றவாளி யாகவும் கோத்தபாய ராஜபக்ஷ பொருளாதார குற்ற வாளியாகவும் மனிதவு ரிமை மீறல் குற்றவாளி யாகவும் விசாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

மற்றவர் சிறையிலிருக்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாக்.கட்டளை அதிகாரிகள் இலங்கையில்



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் அழைப்பையேற்று பாகிஸ்தான் ஸ்கூல் ஆப் லாஜிஸ்டிக்ஸ் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஹசிப் சபார் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த இவ் அதிகாரிகளை இலங்கை இர்ராணுவத்தின் கேணல் ரஞ்சன் ஜயசேகர வரவேற்றார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் விஜயம் செய்த பிரதிநிதிகள், கோட்பாட்டின் அபிவிருத்திக்கான, விநியோகச் சடங்குகள், இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் அவர்களது இலங்கை இராணுவ ஒத்துழைப்புடன் அக்கறை கொண்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் தர்க்கரீதியான கொள்கைகளின் ஒட்டுமொத்த படத்தை சேகரிக்கவும் மற் றும் ஒருவருக்கொருவர் நுணுக்கங்களை பரிமாறிக் கொள்ளும் சாத்தியங்களை ஆராயும் நோக்கமாகவும் இந்த விஜயம் அமைந்துள்ளது. (இ-7)

### தனது தவறுகளை மூடிமறைக்க

# போலிக் குற்றச்சாட்டுக்களை அரசு சுமத்தி வருகின்றது

## நாமல் எம்.பி.பதில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். தமது குடும்பத்தினருக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதனை அரசாங்கம் வாடிக்கையாகக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தவறுகளை மூடி மறைத்துக் கொள்ளவே இவ்வாறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். தேர்தல் அண்மித்துள்ள நிலையில் அரசாங்கம் இவ்வாறு போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகவும் இதன் ஓர் கட்டமாகவே டுபாய் வங்கிகளில் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# யானை தாக்கி ஒருவர் பலி!

(ஏறாவூர்)

ஏறாவூர் - வெள்ளைக் கல்மலைப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானைத் தாக்குதலினால் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டார்.

வந்தாறுமூலை பகுதியை சேர்ந்த 51 வயதான ஒருவரே மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கால்நடைகளை பராமரித்துக் கொண்டு வெள்ளைக் கல்மலைப்பகுதியிலுள்ள வாடியில் தங்கியிருந்த நிலையில் இந்த யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(இ-7)

# யாழ்.குடா கடற்பரப்பில் நேற்று ஒட்டி மீன்கள் அதிகளவில் பிடிப்பு



யாழ். குடா கடற்பரப்பில் நேற்றைய தினம் வழமைக்கு மாறாக அதிகளவான ஒட்டி மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பிடிபட்ட மீன்கள் பாஷையூர் மீன் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு கிலோ 100 இருந்து 150 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. (இ-10-107)

# மகிந்தவின் புகைப்படத்தை புறக்கணிக்க சு.க தீர்மானம்

### துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை பயன்படுத்துவதில்லையென தீர்மானித்துள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் பிரசாரத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் ஸ்தாபகர்கள் ஆகியோரின் புகைப்படங்களையே பயன்படுத்துவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட தலைவர்களின் புகைப்படங்களை பிரசாரத்துக்கு பயன்படுத்துவதனால் எந்தவித இலாபமும் கிடையாது எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகள் தொடர்பான விசேட உயர் நீதிமன்றம் பெப்ரவரி முதல் இயங்கும்

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கிலான விசேட உயர் நீதிமன்றம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இயங்கவுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாத முதல் வாரத்தில் இந்த விசேட உயர் நீதிமன்றம் இயங்க ஆரம்பிக்கும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு. இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழு மற்றும் ஜனாதிபதியினால்நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் மூன்று விசேட உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட உள்ளன.

இந்த விசேட உயர் நீதி மன்றங்களை அமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சரலா அதுலத்முதலி ஜனாதிபதிக்கு ஆதரவு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அதுலத்முதலி மற்றும் ஸ்ரீமதி அதுலத்முதலி ஆகியோரின் புதல்வியான சரலா அதுலத்முதலி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

இதன்போது அவர், ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என தெரிவித்துள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுஜன முன்னணி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த நால்வர் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

இதற்கமைய, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களே இவ்வாறு சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களை மக்களின் முன்னிலையில் அழிக்க ஏற்பாடு

### சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

கைப்பற்றப்படும்போதைப் பொருட்களை பொதுமக்கள் முன்னிலையிலேயே அழிப்பதற்கு தேவையான சட்டங்களை அரசாங்கம் தற்பொழுது தயாரித்து வருவதாக சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்படும் போதைப் பொருட்களை நீதிமன்ற உத்தரவின் பின் அழிக்கும் வரை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்த போதிலும் கடந்த காலம் முழுவதிலும் அப்போதைப் பொருட்கள் மீண்டும் மோசடிக்காரர்களின் கைகளுக்கு கிடைப்பதாக வதந்திகள் பரவின.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலேயே கைப்பற்றப்படும் போதைபொருட்களை பொதுமக்கள் முன்னிலையிலேயே அழிப்பதற்கு தேவையான சட்டங்களை தயாரித்து வருவதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.



2017ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதி முதல் டிசெம்பர் இறுதி வரையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் மூலம் 3755,0686, 437 ரூபா பெறுமதியான ஹெரோயின், சட்டவிரோத புகையிலை, மதுபானம், கஞ்சா போன்ற போதைப் பொருட்களை பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் போதைப்பொருள் மற்றும் பாரதூரமான குற்றங்களை தடுக்கும் பிரிவினரும் கைப்பற்றியுள்ளனர்.

இதுதவிர, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, சுங்கம், கடற்படை, வலானை அவசர சுற்றிவளைப்பு பிரிவு உள்ளிட்ட ஏனைய பாதுகாப்பு பிரிவுகளாலும் இது போன்ற போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடக்கிலுள்ள 215 பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணப் பொதிகள்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திலுள்ள 215 பாடசாலைகளுக்கு 225 ஆய்வுகூட உபகரணப் பொதிகள் அண்மையில் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டன.

கல்வி அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இத் திட்டத்தில் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் விஞ்ஞான பாடஆய்வுகளை மேற்கொள் வதற்கான ஆய்வு கூட பொதிகள் வழங்கப்பட்டன.

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்படும் இத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 215 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9-136)

## இராணுவச் சிப்பாய் மாயம்

(கொழும்பு)

பொலநறுவை - மின்னேரியா இராணுவ முகாமில் சேவையாற்றி வந்த நிலையில், வீட்டிற்கு சென்றிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மின்னேரியா-ஹேன்யாய பிரதேசத்தில் வசித்து வந்த 23 வயதான இராணுவச் சிப்பாயே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிப்பாயின் தாய் இது குறித்து நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போன சிப்பாய் இரத்தினபுரி பிரதேசத்தில் ஏ.டி.எம் இயந்திரத்தில் பணம் எடுத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக சிப்பாய் காணாமல் போன சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இதனடிப்படையில், தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)



யாழ்.இந்துக்கல்லூரி சுகாதாரக்கழகத்தினரின் ஏற்பாட்டில் டெங்குநோய் ஒழிப்பு வேலைத்திட்டம் "டெங்குமுன்காப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் ஆதரவில் கல்லூரி அதிபர் [illegible] வழிகாட்டலின் கீழ் யாழ். இந்துக்கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுக்களை நிரூபியுங்கள் அரசிற்கு மகிந்த பகிரங்க சவால்

(கொழும்பு)

தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் சவால் விடுத்துள்ளார். தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் ஒரு வராலும் முடியாது என மகிந்த தெரிவித்துள்ளார்.



கடவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது கூட்டத்தில் உரையாற்றும் போதே மகிந்த இவ்வாறு சவால் விடுத்தார்.

"எனது கடன் குறித்து கேட்கின்றனர். நாட்டின் வீதிகளில் சென்று பார்த்தால் கடனுக்கான பதில் கிடைக்கும். எனினும் சமகால அரசாங்கம்பெற்றகடனுக்கு என்ன செய்துள்ளனர். வங் கியை கொள்ளையடித்து பெற் றவைகளுக்கு என்ன செய்தார்கள். அவற்றினை தேட ஆணைக்குழு அமைக்கின்றனர். தாஜுடீனுக்கு இறந் தும் நிம்மதி இல்லை. தேர்தல் காலங்களில் மீண்டும் அவரை தோண்டுகின்றனர் என மகிந்த மேலும் தெரி வித்துள்ளார்.

பிரபல றக்பி வீரர் வசீம் தாஜுடீன், மகிந்தவின் புதல் வர்களால் கொல்லப்பட்டதாக குற்றச்சாட்டுமுன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிணைமுறி மோசடி அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுங்கள்

## மத்திய வங்கி ஆளுநருக்கு பிரதமர் ரணில் ஆலோசனை

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை வெளியிடப்பட்டவுடன் நாணயச் சபையுடன் கலந்துரையாடி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கி ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியிடம் பிரதமர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். (இ-7)


# ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சட்ட அதிகாரமில்லையாம்-டியூ

(கொழும்பு)

நீதிமன்ற அதிகாரம் இல்லாத பிணை முறிப்பத்திரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அறிக்கை சமர்ப்பிக்க முடியுமே தவிர ஆணைக்குழுவிற்கு அதற்கு மீறிய அதிகாரங்கள் இல்லை என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

பிணை முறிப்பத்திர விநியோக மோசடி சம்பவம் தொடர்பாக கடந்த மூன்று வருடங்களில் பல்வேறு துறைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள், சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை கிடைக்கும் வரை தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்திய கோப் குழுவின் தலைவர் தான் எனவும் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததும் தான் எனவும் தெரிவித்துள்ள குணசேகர, ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து ஜனாதிபதியின் உரையில் அடங்கிய விடயங்களை பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.



மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கே இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய தேர்தல் முறை குறித்து 80 வீத வாக்காளர்களுக்கு விளக்கமில்லை

## பவ்ரல் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய தேர்தல்முறை தொடர்பாக 80 வீதமான வாக்காளர்கள் சரியான விளக்கமின்றி இருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான, பவ்ரல் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெற்றியாராச்சி,"புதிய தேர்தல்முறை தொடர்பாக நாடு முழுவதும், விளக்கமளிக்கும் கூட்டங் கள் நடத்தப்பட்டுள்ளன. எனி னும், சில வேட்பாளர்கள் கூட, புதிய தேர்தல்முறை பற்றிய விளக்கமின்றி இருக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திருத்தம் மற்றும் மீள் திருத்தம்என்பன, வாக்காளர்களை அதிகளவில் குழப்பியு ள்ளன.

தேர்தல் மறுசீரமைப்புகள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1299

Search for people, places and things

**சரத்**

கார் வாங்குவதற்கு பணக்காரனா இருக்கனும்னு அவசியம் இல்லை



குழந்தையா இருந்தாலே போதும்

**றொகான்**

வாழ்க்கைல விழுந்து எழுந்திருக்கிறதவிட



காலைல ஆறு மணிக்கு தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கிறதுதான் ரொம்ப கஷ்டமா இருக்கு

**ராகுலன்**

டேய் மாப்ள மரத்துமேல இருந்து பாத்தா Engineering College பொண்ணுகளா தெரியிறாங்கடா



கைய விட்டுப்பாரு மாப்ள Medical College பொண்ணுகளா தெரிவாங்க

**அஸ்வின்**



அது ஒரு New Generation Photo pose என்று தெரியாமல் அந்த பாட்டி மேலே என்னமோ போகுதுன்னு பாக்கிறாங்க


**ராஜூ**

மார்கழி மாத எபெக்ட்



என்னா குளிரு

**றெஜினோல்ட்**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எல்லாமே பொய் நாடகம்

## கூட்டு எதிரணி எம்.பி.கெஹலிய விசனம்



( கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் அனைத்து விடயங்களும் பொய் நாடகமே என கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

மத்திய வங்கி பிணைமுறி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் அனைத்து விடயங்களும் பொய் நாடகமாகவே காணப்படுகின்றன. இதில் தவறிழைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பபதற்கான முயற்சிகள் நேர்மையான முறையில் இடம்பெறுவதாக தெரியவில்லை. மாறாக சம்பந்தப்பட்டோரை பாதுகாப்பதற்கே முயற்சிக்கப்படுகிறது.

ஆரம்பத்திலிருந்தே இது தொடர்பான செயற்பாடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. ஆரம்பத்தில் 2015ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆளுநராக வெளிநாட்டுப் பிரஜையொருவரை நியமிக்க பிரதமர் முற்பட்டபோது அமைச்சரவை அதனை எதிர்த்துள்ளது. எனினும் தான் அதனை பொறுப்பேற்பதாக கூறி அந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது. இறுதியில் இவ்வளவு பெரிய மோசடி இடம்பெற்றுள்ளது. ஆனால் தற்போது நடைபெறும் அனைத்து விடயங்களையும் பார்க்கும் போது சம்பந்தப்பட்ட அனைவரையும் பாதுகாப்பதற்கான பொய் நாடகமே இடம்பெறுவதாக எமக்கு தோன்றுகின்றது" எனத் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த 31ஆம் திகதி கையளித்தது.

அந்த அறிக்கையை வாசித்து முடித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அது தொடர்பான தனது நிலைப்பாட்டை கடந்த புதன் கிழமை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரதமர் பதவியிலிருந்து தாமாக விலக வேண்டும் ரணில் விக்கிரமசிங்க

### வீரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமது பதவியிலிருந்து தாமாக விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சியாக இந்த அராங்கம் உருவாக்கப்பட்டாலும் பிரதமர் உள்ளிட்டவர்களின் செயற்பாடுகள் அதன் தன்மையை சிதைத்துள்ளன.

இந்த நிலையில், முறி மோசடி தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை பிரதமர் தமது பதவியில் இருந்து விலகிச் சென்று அந்த பொறுப்புக்களை ஜனாதிபதியிடம் வழங்க வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

## கூட்டமைப்பை பலவீனப்படுத்த தென்னிலங்கை திட்டமாம் கோவிந்தன் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பேரம் பேசுகின்ற ஒரு சக்தியாக உருவாக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் ஆனால் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் திட்டத்துடன் தென்னிலங்கையினால் பலர் தேர்தலில் களம் இறக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சின்ன ஊறணி நான்காம் வட்டாரத்தில் போட்டியிடும் கந்தசாமி சத்தியசீலனின் தேர்தல் செயற்பாடுகளுக்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அந்தந்த வட்டாரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஒரு புதுவிதமான தேர்தலாக இருக்கின்றது. வட்டார முறையும் விகிதாசார முறையும் கலந்த கலப்பு முறைத் தேர்தலாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாநகர சபையை பொறுத்தவரை 20 பேர் வட்டார முறையிலும் 11பேர் பட்டியல் முறையிலும் தெரிவு செய்யப்பட்டு 33 பேரைக் கொண்ட ஒரு மாநகரசபையாக இயங்க இருக்கின்றது.

ஒரு வட்டாரத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது.

கடந்த காலங்களில் நடந்த போராட்டங்களினால் தமிழ் மக்களான எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய வேண்டுமானால் சுதந்திரமான சுயாட்சியுடனான ஒரு தீர்வு கிடைக்க வேண்டுமானால் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நிற்க வேண்டிய தேர்தலாக இது அமைய வேண்டும்.

கடந்த காலங்களில் பலம் பொருந்திய ஒரு இனமாக நாங்கள் இந்த நாட்டில் இருந்தோம். அரசியல் ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் பலம் மிக்க ஒரு அமைப்பாக இருந்தோம். எமது இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக ஒரு நிரந்தர தீர்வினை எட்டக்கூடிய சூழ் நிலையில் நாங் கள் இன்று இருக்கின்றோம். நாடாளுமன்றமானது எமக்கு தீர்வினை கொண்டு வரக் கூடிய அரசியல் சாசன சபையாக இன்று மாறியிருக்கின்றது. (இ-7)

## யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர்த்தேரடி அருகே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். யோகா உலகம் அமைப்பு புதிய யோகா பயிற்சி நெறிகளை நல்லூர்த் தேரடி அருகிலுள்ள அறுபத்துமூன்று நாயன்மார் குரு பூசை மடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் சுதேச மருத்துவர் ஜெயசோதி ஜெயசீலன் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.கேதீஸ்வரன் 'ஆரோக்கியத்திற்கான யோகா' என்னும் தொனிப் பொருளிலும் போதனாசிரியர் எஸ்.உமாசுதன் "சித்தர்களின் யோகம்" என்னும் விடயம்பற்றியும்கருத்துக்களை வழங்கினர்.

அத்துடன் இந் நிகழ்வில் யாழ். சித்த மருத்துவ அலகின் நான்காம் வருட சித்த மருத்துவ மாணவன் மொஹமட் சதாமின் யோகாசன ஆற்றுகையும் இடம்பெற்றது.

யோகா வகுப்புக்கள் காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணிவரையும் மாலை நேர வகுப்புக்கள் முறையே 4.30 மணி தொடக்கம் 5.30 வரையும் மற்றும் 6 மணி தொடக்கம் 7 மணிவரையும் பயிற்சி நெறிகள் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறவுள்ளன.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசான்களால் பதஞ்சலி யோக வழிமுறையில் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டுகையேடு, சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியும் என்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ

## பிறந்து 3 மணித்தியால குழந்தை குப்பையிலிருந்து கண்டெடுப்பு!

(கொழும்பு)

இரத்திரனபுரி குருவிட்ட பிரதேசத்தில் பிறந்து மூன்று மணித்தியாலங்களில் கைவிட்டுப் போன குழந்தையொன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்க்கப்பட்ட குழந்தை இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இக் குழந்தையின் தாய் தந்தையரைத் தேடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள தாகவும் குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## முன்னாள் முதலமைச்சர் நஷீரை உருவாக்கியவர் பிள்ளையான்

### துரைராஜசிங்கம் தெரிவிப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முதலமைச்சராக ஹாபீஸ் நஷீரை உருவாக்கியவர்கள் பிள்ளையான் உள்ளிட்டவர்கள் என்பதனை யாரும் மறுக்க முடியாது என தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு புளியந்தீவு 18ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் அந்தோனி கிருராஜனின் தேர்தல் செயற்பாடுகளுக்காக தேர்தல் அலுவலகம் நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

'உலகத்தையே தன்வசம் திரும்பிப் பார்க்கச் செய்த விடுதலை இயக்கத்தைச் சுக்கு நூறாக்கிவிட்டு மகிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிள்ளைகளாக அவர்கள் ஆகினர் அதனால் தான் பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் மகிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிள்ளையாக இருந்தாரே ஒழிய உண்மையிலே இந்த கிழக்கு மாகாண சபையிலே உறுப்பினராக தெரிவு செய்யப்படவில்லை. ஆனால் அவருக்கு கிடைத்த ஆசீர்வாதத்தால் மட்டும் முதலமைச்சரானார்.

அதனை எடுத்துக்கொண்டு தாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை வைத்திருந்ததாகவும் குறிப்பிட்ட காலத்திலே இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தார் என்றும் சொல்லுகின்றார்கள்.

கிழக்கு மாகாணத்திலே 11 உறுப்பினர்களை எடுத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரசை ஆளச் செய்தோம் என தம்பி பிரசாந்தன் சொல்லுகின்றார்.

ஆனால் உண்மை அதுவல்ல முதலமைச்சராக இருந்து ஓய்வு பெற்றிருக்கின்ற ஹாபீஸ் நஷீரை முதலமைச்சர் ஆக்கியது பிள்ளையான் மற்றும் முஸ்லிம் அமைச்சர்களான கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரான உதுமாலெப்பை உள்ளிட்டவர்கள் சேர்ந்து அவர்கள் 19 பேர் கையெழுத்திட்டு ஆளுநரிடம் கொடுத்த கடிதத்தின் மூலம் முதலமைச்சராக ஆக்கப்பட்டவர்தான் ஹாபீஸ் நஷீர்.

அவர் முதலமைச்சராக ஆக்கப்பட்டதன் பிறகு மத்திய அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்த்துக் கொண்டு தான் கிழக்கு மாகாணம் ஆட்சி செய்யப்பட வேண்டும் என்ற நெறிவுறுத்தல் கொடுக்கப்பட்டதன் பின்பு எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஆட்சியில் பங்காளியாக மாறுவதற்கு அவசியம் ஏற்பட்டது.

ஆக அப்போது இருக்கின்ற நிலமையைப் பார்த்து இந்த நிலைமையை அனுசரித்து இதனடிப்படையிலே எங்கள் மக்களுக்கு அபிவிருத்தியையும் செய்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலே தான் முஸ்லிம் காங்கிரஸ் எங்களுடைய கொள்கையோடு ஓரளவிற்கு செயற்படுவதால் ஓர் கட்சி என்ற அடிப்படையில் சேர்ந்து கொண்டு நாங்கள் கிழக்கு மாகாணத்திலே ஆட்சியிலே பங்காளியாக இருந்தோம்.

முதலமைச்சராக ஹாபீஸ் நஷீரை உருவாக்கியவர்கள் பிள்ளையான் உள்ளிட்டவர்கள் என்பதனை யாரும் மறுக்க முடியாது மறைக்கவும் முடியாது" என துரைராஜசிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ராஜாவும் முட்டாள் குரங்கும்



வேதபுரி என்ற நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் தனக்கு பரிசாக கிடைத்த குரங்கு ஒன்றை ஆசையாக வளர்த்து வந்தார். அந்த குரங்கும் அந்த அரசரின் மீது மிகவும் பாசமாக இருந்தது.

ஒரு நாள் ராஜா வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலா வப் போகும் பொழுது குரங்கையும் கூடவே அழைத்துச் சென்றார்.

செல்லும் வழியில் ஒரு முட்புதருக்கு நடுவில் பாம்பு ஒன்று இருப்பதை குரங்கு கவனித்தது. உடனே அந்த குரங்கு தாவி குதித்து பாம்பு இருப்பதை ராஜாவிடம் காண்பித்தது. அந்த பாம்பு ராஜாவை கடிக்கும் முன்பு குரங்கு பாம்பிடம் சண்டையிட்டு பாம்பைக் கொன்றது.

சரியான சமயத்தில் ராஜா, பாம்புக் கடியிலிருந்து தப்பித்தார். குரங்கின் எச்சரிக்கை உணர்வையும், விசுவாசத்தையும் பார்த்து ராஜா மிகவும் நெகிழ்ந்தார்.

உடனே, அந்தக் குரங்கையே தன்னுடைய பாதுகாவலராக நியமிக்க முடிவு செய்தார். அவருடைய இந்த முடிவைக் கேட்ட மந்திரிகள் அனைவரும் திகைத்து நின்றனர்.

அவர்கள் ராஜாவிடம், 'ராஜா என்னதான் இருந்தாலும் அது ஒரு விலங்குதானே! அதற்கு மனிதர்கள் மாதிரி பகுத்தறிவோ, முடிவெடுக்கும் திறமையோ இருக்காதே! உங்களுடைய இந்த விபரீத எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்.

ராஜா கேட்கிறதாக இல்லை.

'என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு அந்தரங்கப் பாதுகாவலனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி பாசமும், விசவாசமும்தான்! அது என் குரங்கிடம் நிறையவே இருக்கு! அதனால் என் பாதுகாவலுக்கு மனிதர்கள் வேண்டாம். குரங்கே போதும்" என்று தீர்மானமாக சொல்லிவிட்டார்.

அன்று முதல் குரங்கு, ராஜாவை விட்டு ஒரு நிமிடம் கூட விலகாமல் அவர் எங்கு போனாலும் கூடவே போவதும் வருவதுமாக இருந்தது.

ஒரு நாள் ராஜா குரங்கிடம் 'எனக்கு தூக்கம் வருகின்றது. நான் சற்று நேரம் தூங்கப் போறேன். என்னை யாரும் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டு தூங்க ஆரம்பித்தார்.

குரங்கும் மிகவும் அக்கறையாக, படுக்கைக்குப் பக்கத்திலேயே இருந்து காவல் காத்தது. அந்த சமயம் பார்த்து அங்கு ஒரு ஈ வந்தது. அது ராஜா காது கிட்ட வந்து 'ஸொய் ஸொய்" என்று கத்தி ராஜாவை தொந்தரவு செய்தது. குரங்கு 'சூசூ"என்று துரத்தியது. சற்று நேரம் கழித்து. அந்த ஈ திரும்பவும் அங்கேயே சுத்தி சுத்தி வந்துகொண்டே இருந்தது. குரங்குக்கு கோபம் தாங்கவில்லை. ஈக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்று தீர்மானித்தது. அது ராஜாவோட வாளை கையில் எடுத்தது. இந்த முறை ஈ வந்தா அதை ஒரே போடு போட்டு ரெண்டு துண்டாக்கிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தது.

நடப்பது எதுவும் தெரியாத ராஜாவோ பாவம் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ஈ திரும்பவும் வந்தது. இந்தத் தடவை அது ராஜாவோட கழுத்துக்கு மேலே பறந்தது.

தயாராக இருந்த அந்த குரங்கும் ஈயை ஒரே வெட்டாக வெட்டியது. ஐயோ! என்ன பரிதாபம்! ஈ பறந்து விட்டது. ராஜா தலை துண்டாகிப் போனது. இப்படியாக, ராஜா தன்னுடைய சொந்த பாதுகாவலனாலேயே கொல்லப்பட்டார்.

ரர்ஜா இறந்த விடயத்தைக் கேள்விப்பட்டு அந்த நாட்டு மக்களும் அமைச்சர்களும் சோகத்தில் மூழ்கினார்கள்.

அவர்கள் "புத்திசாலியான எதிரியை விட முட்டாளான தோழன் தான் ரொம்ப ஆபத்தானவன்" என ராஜாவுக்குத் தெரியாமல் போய் விட்டதே என்று புலம்பினார்கள்.




❖1297- மொனாக்கோ விடுதலை பெற்றது.

❖1782- திருகோணமலை கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்..

❖1838- ராபர்ட் கால்டுவெல் மதப் பணியாற்ற அயர்லாந்தில் இருந்து சென்னை வந்தார்.

❖1867- வோஷிங்டன், டிசியில் ஆபிரிக்க அமெரிக்கர்கள் முதன்முறையாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

❖1902- நியூயோர்க் நகரில் இடம்பெற்ற தொடரூந்து விபத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

❖1906- நியூயோர்க்கில் ஹட்சன் ஆற்றில் களிமண் கிண்டும் போது இடம்பெற்ற நிலச்சரிவில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

❖1912-ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

❖1926-அப்துல்-அசீஸ் இபன் சாவுட் ஹெஜாஸ் நாட்டின் மன்னராக முடிசூடி அதன் பெயரை சவுதி அரேபியா என மாற்றினார்.

❖1959- பிடெல் காஸ்ட்ரோவின் கியூபப் புரட்சி முடிவுக்கு வந்தது.

❖1995- தமிழீழ விடுதலைப் புலிகள் - சந்திரிகா அரசு போர் நிறுத்தம் ஆரம்பமாகியது.

❖2008- கொழும்பு புறநகர்ப் பகுதியான ஜா-எலயில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டி.எம்.தசநாயக்க உட்பட மூவர் கொல்லப்பட்ட னர்.

### பிறப்புகள்

❖1847- ம. க. வேற்பிள்ளை, ஈழத்து உரையாசிரியர், தமிழறிஞர், பதிப்பாசிரியர் (இ. 1930)

❖1867-எமிலி கிரீன் பால்ச், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1961)

❖1894- மாக்சிமிலியன் கோல்பே, போலந்து கத்தோலிக்கப் புனிதர் (இ. 1941)

❖1899- ஏ. பெரியதம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1978)

❖1899- சாலமன் பண்டாரநாயக்கா, இலங்கையின் 4வது பிரதமர் (இ. 1959)

❖1902- கார்ல் ரோஜர்ஸ், அமெரிக்க உளவியலாளர் (இ. 1987)

❖1926-கேளுச்சரண மகோபாத்திரா, இந்திய நடனக் கலைஞர் (இ. 2004)

❖1928- மா. செங்குட்டுவன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர், இதழாளர்

❖1935- எல்விஸ் பிரெஸ்லி, அமெரிக்கப் பாடகர் (இ. 1977)

❖1942- ஸ்டீபன் ஹோக்கிங், ஆங்கிலேய இயற்பியலாளர், எழுத்தாளர்

❖1942- ஜுனிசிரோ கொய்சுமி, சப்பானின் 56ஆவது பிரதமர்

❖1975- ஹாரிஸ் ஜெயராஜ், இந்திய இசையமைப்பாளர்

❖1984- கிம் ஜாங்-உன், வடகொரியாவின் 3ஆவது ஜனாதிபதி

### இறப்புகள்

❖1324- மார்க்கோ போலோ, இத்தாலிய வணிகர் (பி. 1254)

❖1642- கலிலியோ கலிலி, இத்தாலிய இயற்பியலாளர், கணிதவியலாளர், வானியலாளர் (பி. 1564)

❖1914- நடனகோபாலநாயகி சுவாமிகள், சௌராட்டிர மதகுரு (பி. 1843)

❖1941- பேடன் பவல், சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்த ஆங்கிலேயர் (பி. 1857)

❖1952- அந்தோனியா மோரி, அமெரிக்க வானியலாளர் (பி. 1866)

❖1976-சோ என்லாய், சீனாவின் முதலாவது பிரதமர் (பி. 1898)

❖1994- சந்திரசேகர சரசுவதி, காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி (பி. 1894)

❖1997- மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1911)

❖2008- லசந்த விக்கிரமதுங்க, இலங்கை ஊடகவியலாளர்

❖2010- ஆர்ட் குலொக்கி, அமெரிக்க இயக்குநர் (பி. 1921)

❖2012- அடிகளாசிரியர், தமிழகத் தமிழறிஞர் (பி. 1910)

### சிறப்பு நாள்

❖பொதுநலவாய நாள் (வடக்கு மரியானா தீவுகள்)

❖தட்டச்சு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 130 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 180 |
| தக்காளி | 120 | 90 | 120 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 80 | 100 |
| கரட் | 100 | 130 | 200 | 120 |
| பூசணி | 60 | 40 | 80 | 50 |
| புடோல் | 100 | 70 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 400 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 100 | 140 | 140 |
| பாகற்காய் | 250 | 200 | 320 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 150 | 130 | 120 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 60 | 140 | 140 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 250 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 200 | 200 | 160 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 130 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 60 | 30 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 75 | 100 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 350 | — | 120 |
| முள்ளங்கி | 120 | 160 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | — | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் வீரவன்சவின் குற்றங்களை விசாரிக்க தனி ஆணைக்குழு வேண்டும்



## ஐ.தே.க.அமைச்சர் ஹரிசன் கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச செய்த ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த தனியான ஆணைக்குழுவை நியமிக்குமாறு அமைச்சர் பீ.ஹரிசன், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

விமல் வீரவன்சவிடம் இரண்டு தேசிய அடையாள அட்டைகள் இருக்கின்றன. இதனால், அவர் இரண்டு முறை தேர்தலில் வாக்களிக்கக் கூடும் என்ற சந்தேகம் உள்ளது. மேலும் வீரவன்சவின் குடியுரிமை தொடர்பாகவும் சந்தேகம் இருக்கின்றது.

அதேவேளை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த. உண்மையான ஆதரவுடன் தற்போதைய ஜனாதிபதியுடன் இருக்கவில்லை.

அவரது உடல் மைத்திரியிடம் இருந்தாலும் மனம் எங்கிருக்கின்றது என்பதை நம்ப முடியாது எனவும் அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்தார்.(இ-7)

## லத்விய ஜனாதிபதி இலங்கையில்!

(கொழும்பு)

பத்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு லத்விய ஜனாதிபதி ரேமண்ட்ஸ் வேஜனிஸ் தனது பாரியாருடன் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார்.


இலங்கை வந்துள்ள அவரும் அவருடைய குழுவினரும் அரசு மற்றும் பல முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளனர். லத்விய ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல இடங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-7)



## ட்ரம்பின் அடுத்த அதிரடி

(வோஷிங்டன்)

தீவிரவாதத்தை ஒழிக்க பாகிஸ்தானுக்கு தரும் நிதியை நிறுத்தி அந்த தொகையை வைத்து அமெரிக்காவில் வீதி மற்றும் பாலங்களை அமைக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.




பாகிஸ்தானில் இயங்கி வரும் தலிபான் தீவிரவாதிகள் மற்றும் ஹக்கானி தீவிரவாத குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறிய பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா அளிக்கவிருந்த 20 இலட்சம் டொலர் நிதியை இரத்து செய்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். அமெரிக்க அரசின் இந்த முடிவால் பாகிஸ்தான் அதிர்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க அரசை கண்டித்து பாகிஸ்தானில் உள்ள இம்ரான் கான் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் சிலர் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆளும் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான ராண்ட் பால் என்பவர் "அமெரிக்க நாட்டின் தேசிய கொடியை எரித்தும், அமெரிக்கா ஒழிக என்று கோஷமிட்டும் வரும் நாடுகளுக்கு அமெரிக்கா சல்லிக்காசு கூட கொடுக்க கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நான் விரைவில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்த இருக்கிறேன்.

பாகிஸ்தானுக்கு அனுப்பும் பணத்தை வைத்து நமது தாய்நாட்டில் வீதிகள், பாலங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இந்த மசோதா வழிவகுக்கும் என தனது வீடியோ செய்தியில் ராண்ட் பால் குறிப்பிட்டிருந்தார்.

ராண்ட் பால் வெளியிட்ட வீடியோவை தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நல்ல யோசனை ராண்ட் என்று அவரை பாராட்டியும் உள்ளார்.

ராண்ட் பால் கொண்டு வரும் மசோதாவை பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தால் இதுவரை ஆண்டுதோறும் பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அமெரிக்கா அளித்துவந்த நிதி அனைத்தும் முற்றிலுமாக நிறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தமிழகத்தின் எதிர்கால முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.போல் இருக்க வேண்டும்

### இராதாகிருஸ்ணன் விருப்பம்



(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழ் நாட்டில் முதலமைச்சர்களாக வருபவர்கள் மறைந்த முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.போல இருக்க வேண்டுமெனவும், அவரைப் போல சேவை செய்ய வேண்டுமெனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சென்னையில் நடைபெற்ற உலக தமிழர் திருநாள் மற்றும் உலக தமிழ் வம்சாவளி ஒன்று கூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எங்களுடைய நாட்டில் 30 வருட கால யுத்தம் நிறைவடைந்து தற்பொழுது மிகவும் அமைதியான ஒரு நாடாக அது இருக்கின்றது. எனவே உலகின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்திருக்கின்ற தமிழர்களிடம் நான் விடுக்கின்ற வேண்டுகோள் நீங்கள் எல்லோரும் எங்களுடைய இலங்கை நாட்டில் வந்து உங்களுடைய முதலீடுகளை அங்கே செய்ய வேண்டும். செய்கின்ற பொழுது தமிழர்களுடைய வாழ்வும் பொருளாதாரமும் இன்னும் சிறப்பாக இருக்கும். எங்களுடைய முன்னேற்றத்திற்கு நீங்கள் ஒரு உந்துசக்தியாக செயற்பட வேண்டும். நீங்கள் எங்கள் நாட்டிற்கு வருகை தந்தால் அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதற்கு எங்களுடைய அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

இலங்கை தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்று வருகின்ற பொழுது முதலில் குரல் கொடுப்பவர்களாக தமிழக மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தமிழ் உணர்வு இருக்கின்றது. அதனை நான் வரவேற்கின்றேன். அதே போல எங்களுடைய அனைத்து தேவைகளிலும் இந்திய அரசாங்கத்தின் உதவி தேவைப்படுகின்றது. இந்த உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் மூலமாக எங்களுடைய இலங்கையில் இருக்கின்ற தமிழ் குழந்தைகளின் கல்விக்கு உதவிகளை செய்ய முடியுமாக இருந்தால் அது இன்னும் சிறப்பாக இருக்கும்.

சிறந்த முதலமைச்சராக செயற்பட்ட மறைந்த எம்.ஜி. ராமச்சந்திரனை தந்தது இலங்கை நாடு. அவர் அங்கிருந்து இங்கு வந்து இங்குள்ள மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து சேவை செய்தவர். அதுமட்டுமல்லாமல் இலங்கை தமிழர்களுக்கும் அதிக உதவிகளை செய்தவர். அவர் என்றுமே மக்களை பற்றியே சிந்தித்தவர். அவர் மறைந்தாலும் அவர் மக்களின் மனங்களில் இருந்து இன்னும் மறையவில்லை. அவருடைய திட்டங்களை மத்திய அரசாங்கமே பாராட்டுகின்ற அளவிற்கு இருந்தது. இன்று அவர் இல்லாத அந்த குறையை இந்த மக்கள் உணருகின்றார்கள்.

எதிர்காலத்தில் தமிழ் நாட்டின் முதலமைச்சர்களாக வர இருப்பவர்களை நான் வரவேற்கின்றேன். அவர்கள் வெற்றி பெற்ற பின்பு மறைந்த எம்.ஜி.ராமச்சந்திரனை போல வர வேண்டும். அவர் செய்த சேவைகளை மீண்டும் செய்ய வேண்டும். அவரை ஒரு உதாரண புருசராக கொண்டு செயற்பட வேண்டும். அப்படி செய்தால் நிச்சயமாக இந்த மக்களின் வாழ்வில் பாரிய மாற்றம் ஏற்படும்' எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மலேசிய நாட்டின் துணை கல்வி அமைச்சர் டத்தோ கமலநாதன், நடிகர் ராதாரவி, உலக புகழ் அறி விப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத், மலேசிய நாட்டின் நாடாளுமன்ற அங்கத்தினர்களான ரவி, மணிவண்ணன் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## ரவி கருணாநாயக்க பொய் சொல்கிறார்

### எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பொய்யெனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என அமைச்சரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


இந்த அறிக்கை பொய்யானது என எந்தவொருவருக்கும் விமர்சிக்க முடியும். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். இந்த அறிக்கை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி அதிகாரம் எமக்கு கிடைக்கப்பெற்றால்

# பாகுபாடுகளுக்கு இடமளிக்கப்போவதில்லை

## மட்டு.மாநகரில் டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு



(ஏறாவூர்)

எமது கைகளுக்கு மட்டக்களப்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றால் பாகுபாடான செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளுராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட டக்ளஸ் தேவானந்தா குறித்த பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் உள்ளுராட்சி மன்றங்களூடாக மக்களுக்கு சேவை செய்வதற்கான முழுமையான சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைத்திருக்கவில்லை. இதனால் இங்கு வாழும் மக்களுக்கு எமது கட்சியினூடாகச் சேவைகளைச் செய்ய முடியாது போனது. இந்த நிலையில் தான் நாம் நடைபெறவுள்ள உள்ளுராட்சி மன்ற தேர்தலில் வடக்கு மாகாணம் மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

இங்கு மக்கள் எதிர் கொள்ளும் பல பிரச்சினைகள் இலகுவாக தீர்வுகாணப்படக் கூடிய சூழ்நிலை காணப்பட்டாலும் அவற்றுக்கு சரியான முறையில் தீர்வுகள் காணப்படாதுள்ள நிலைமையே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் முழுமையான ஆதரவுப்பலத்துடன் இம்மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளுராட்சி மன்றங்களினதும் ஆட்சி அதிகாரங்களை நாம் கைப்பற்றுவோமானால் இங்கு வாழும் மக்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிச்சயம் பாகுபாடுகள் அற்றவகையில் தீர்வுகள் கண்டுதருவோம்.

இதுவிடயத்தில் அச்சப்படத்தேவையில்லை என்றும் தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா வீணைச்சின்னத்தைக் கொண்டதான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றியை உறுதி செய்த உங்களது உங்கள் பகுதிகளின் அபிவிருத்தியையும் தேவைப்பாடுகளையும்பெற்றுக் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நுவரெலியாவில் கடும் பனிப்பொழிவு



(ஹற்றன்)

நாட்டில் பொதுவாக வறட்சியான காலநிலையே காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரவு மற்றும் காலை வேளைகளில் நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் குளிரான காலநிலை காணப்படும்.

பொதுவாக மேற்கு சப்ரகமுவ மத்திய மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு- கிழக்கில் தற்பொழுது குளிருடனான காலநிலை காணப்படுகின்றது. இதற்கு காரணம் வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதனே ஆகும்.

இந்த காலநிலை பெப்ரவரி மாதம் வரை நீடிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக வடக்கு- கிழக்கில் இக்கால பகுதியில் பனி காணப்படுவது வழமை.

இதன் காரணமாக எதிர் வரும் 12 ஆம் திகதி முதல் சுமார் ஒரு வாரகாலத்திற்கு குறைந்த அளவான மழை வீழ்ச்சியையே எதிர்பார்க்க முடியும்.

மழையின் பின்னரும் பனியுடனான காலநிலை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை நேற்று அதிகாலையும் நுவரெலியாவிலுள்ள குதிரை மைதானம் பனியால் படர்ந்து காணப்பட்டது. நுவரெலியாவில் 4 செல்சியசாக வெப்பநிலை காணப்பட்டது.

நுவரெலியாவின் பல இடங்களில் இவ்வாறு தரையில் பனி படர்ந்திருந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## வில்பத்து - பூக்குளம் பிரதேசத்தில் யானைகள் கொலை செய்யப்படவில்லை

## அமைச்சர் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

வில்பத்து - பூக்குளம் பிரதேசத்தில் யானைகள் கொலை செய்யப்படவில்லை என வனஜீவராசிகள் வளத்துறை அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் கல்லாறு யானையின் உடல் எச்சங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த யானை மரணமடைந்த பின்னரே அதன் தந்தங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காட்டு யானைகள் கொல்லப்படுகின்றமை தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுவோருக்கு ஆயுள் தண்டனை விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஏதுவான வகையில் வனஜீவராசிகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கண்டியில் கெபிற்றிபொல மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நாவலர், அறிஞர் சித்திலெப்பை ஆகியோரது நினைவுதின நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கலாநிதி நா. தனேந்திரன் கலந்துகொண்டு மலையகத்தின் மூத்த பத்திரிகையாளருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் கலை நிகழ்ச்சி நடத்திய மாணவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## சிவனொளிபாதமலையில் 13 இளைஞர்கள் கைது

### போதைப் பொருட்கள் மீட்பு



(கொழும்பு)

சிவனொளிபாத மலைக்கு வழிபாட்டுக்காக சென்ற 13இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை ஹற்றன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


தியகல பொலிஸ்சோதனை சாவடியில் வைத்து இவர்கள் நேற்றுமுன்தினம்மாலை 4 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய விசேட சோதனை பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, கேரளக் கஞ்சா, போதை வில்லைகள், சட்டவிரோதமான சிகரட்டுக்கள் மற்றும் மதன மோதகம் போன்ற போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

போகந்தர, மட்டக்களப்பு, கண்டி, கம்பளை, குருநாகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 20க்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களே கைதாகியுள்ளனர். (இ-7)

## அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பதவி விலக வேண்டும்-சொய்சா



(கொழும்பு)

அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, கமத்தொழில் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவே பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரஞ்சித் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளுக்கும் சிறப்புரிமைகளை எதிர்ப்பார்த்து அரசாங்கத்தில் அங்கம் வகித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.

- ஃபிராங்க்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் மக்களுக்கு சாபதோசம் உண்டோ!

முனிபுங்கவரின் சாபத்தால் தசரதனின் மரணம் புத்திர சோகத்தால் நிகழ்ந்தது. கௌதமரின் சாபம் அகலிகையைக் கல்லாக்கியது. கர்ணனை நோக்கி உற்றபோது கற்றது மறப்பாய் என பரசுராமர் சபித்ததன் காரணமாக குருசேத்திரப் போர்க்களத்தில் கர்ணன் ஞாபக சக்தியை இழக்க அதுவே அவனுக்கு மரணமாகிறது.

தவிர இராவணனின் அதர்மம், நரகாசுரனின் கொடுமை, சூரபன்மனின் அட்டூழியம் என்பவற்றின் காரணமாக இறைபரம்பொருள் அவதாரம் எடுத்து அநீதி புரிந்தவர்களை அழித்தொழித்தார்.

இவையெல்லாம் புராணக் கதைகளும் இதிகாசங்களின் உள்ளீடு என்று நாம் கூறினாலும் இவையே நிதர்சனமானவை. எனினும் இவை பற்றி பலரும் பொருள் கொள்வதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, எங்கள் இனத்தின் அரசியல் பற்றி நினைக்கும்போதெல்லாம் வேதனையே மிஞ்சும். இத்தகைய மனநிலை யார் மீதும் நாம் கோபம் கொண்டதால் ஏற்பட்டதன்று.

மாறாக எங்கள் மக்களின் எங்கள் இனத்தின் எதிர்காலம் பற்றிய நினைப்பினால் எழுந்தது.

நல்லதொரு அரசியல் தலைமை தமிழ் மக்களிடம் இருந்திருக்குமாயின் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்களும் படைத் தரப்பினரும் சர்வதேச சமூகத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருப்பர்.

வன்னியில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் கொல்லப்பட்டமை உள்ளிட்ட அத்தனை போர்க்குற்றங்கள் தொடர்பிலும் இலங்கைக்கு சிக்கல்கள் எழுந்திருக்கும்.

ஆனால் எங்கள் அரசியல் தலைமை அரசுடன் சேர்ந்துபோதல் அல்லது இணைந்து செயற்படுதல் என்ற காரணத்தைக் கூறி போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து ஆட்சியாளர்களைக் காப்பாற்றினர்.

இவ்வாறு குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றியதால் எங்கள் விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடு விடுபடலாயிற்று.

முரண்பட்டுக் கொண்ட இருதரப்பினரும் இணங்கிப் போவதாகக் கூற, மூன்றாந்தரப்பு அந்த விடயத்தில் தலையிடும் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியமே. இதுவே எங்கள் விடயத்திலும் நடந்தது.

வன்னிப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்தியிருந்தால்,

ஐ.நா மனித உரிமை ஆணையம் பிறப்பித்த விடயங்களை இலங்கை அரசு உடனடியாக அமுலாக்க வேண்டும். இந்த விடயத்தில் கால அவகாசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தமிழ் அரசியல் தலைமை கூறியிருந்தால், எங்களுக்கு ஏதேனும் கிடைத்திருக்கும்.

ஆனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு காலஅவகாசம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூற, இப்போது எமக்கு எதுவும் கிடையாது என்ற நிலைக்கு வந்துள்ளோம்.

இவற்றையெல்லாம் நினைக்கும்போது தமிழ் மக்களுக்கு ஏதேனும் சாபங்கள் உண்டோ என்று எண்ணத் தோன்றுகிறது.

# ரணிலே அடுத்த ஜனாதிபதி

## நஷீர் அஹமட் ஆரூடம்

(கொழும்பு)

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிக்கப் போகின்றார். இந்தக் கள நிலைவரங்களைப்புரிந்துகொள்ளாமல், நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விலை போய்விட்டோம் என ஒரு சாரார் கொக்கரிப்பது, அரசியல் அறிவுச் சூனியமான பேச்சேயன்றி வேறில்லை" என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தவிசாளருமான செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

அத்துடன், "எடுத்ததெற்கெல்லாம் மக்களிடம் வரி அறவிட்டு, தாங்க முடியாத வரிச்சுமையை மக்கள் மீது ஏற்படுத்தி, உள்ளூராட்சி மன்றங்கள் என்றாலே மக்களிடம் வெறுப்பேறுமளவுக்கு உள்ள நிலைமையை மாற்றி, முழுவதுமாக மக்களுக்குச் சேவை செய்வதை நடைமுறையில் காட்டவே, நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றப் போகின்றோம்" எனவும் அவர தெரிவித்தார்.

ஏறாவூரில் நேற்று வட்டாரத் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஒருபோதும் அதன தனித்துவத்தை இழக்கவில்லை. சமயோசிதமான சிந்தனை மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அரசியல் வியூகங்களை வகுத்தே, அக்கட்சி செயற்பட்டு வந்திருக்கின்றது என்பது, அதன் கடந்தகால வரலாறுகளிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

"நாங்கள் எங்கெங்கெல்லாம் தேர்தலில் போட்டியிடுகின்றோமோ அங்கெல்லாம், ஆட்சியைக் கைப்பற்றுவோம். இது உறுதியான விடயம். அரசியல் ரீதியான வியூகங்களில் நாம் ஒருபோதும் தோற்றுப் போனதில்லை.

"உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றபோது, நாட்டிலுள்ள 70 சதவீதமான உள்ளூராட்சி மன்றங்களின் அடுத்து வரும் ஆட்சியை, ஐக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றும். அந்த வியூகத்தின் அடிப்படையிலேயே, நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுகின்றோம்.

"கிழக்கு மாகாணத்திலே சிறந்த நவீன சந்தை, இலத்திரனியல் வாசிகசாலை, சுமார 2500 பேர் அமர்ந்து நிகழ்வுகளைக் கண்டு களிக்கக்கூடிய கலாசாரக் கேட்போர்கூடம், நவீன வசதிகள் கொண்ட அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என்பன ஏறாவூரில் அமையும். இதனை விட, ஏறாவூர் நகரசபை என்ற அந்தஸ்தில் இருந்து, மாநகர சபை என்ற அந்தஸ்தைப் பெறும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார். (இ-7)

# கல்லுண்டாய் வெளிப்பகுதியில் திண்மக்கழிவுகளை கொட்டுவதற்கு மல்லாகம் நீதிமன்றம் தடைவிதிப்பு

யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள திண்மக் கழிவகற்றல்பகுதியில் யாழ் மாநகர சபை மற்றும் ஏனைய பிரதேச சபைகள் மலக் கழிவுகளைக் கொட்டுவதற்கு மல்லாகம் நீதவான் நீதிமன்று தடைவிதித்துள்ளது.

கல்லுண்டாய் வெளியில் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் சட்டத்தரணி கே.சுகாஷ் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாநகர சபையால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் யாழ்.- காரைநகர் வீதி கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன. அத்துடன், மலக்கழிவுகளும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளும் அப்பகுதியில போடப்பட்டு வந்துள்ளன.

இது அப்பகுதி மக்களை மிகவும் அச்சுறுத்துகின்ற ஒரு விடயமாக இருந்து வந்தது. அங்கு கொட்டப்படும் திண்மக் கழிவுகள் தொடர்பில் யாழ். மாநகர சபை சீரான முகாமையைப் பேணுவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வந்தது.

அப்பிரதேசத்தை சூழவுள்ள நவாலி, அராலி, ஆனைக்கோட்டைப் பகுதி மக்கள் பாதிக்கப்படுவதுடன் குப்பைமேட்டால் எழும் புகைமண்டலத்தால் போக்குவரத்தில் ஈடுபடுவோரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நவாலி மக்கள் சார்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்திருந்தோம்.


அந்த வழக்கு கடந்த இரண்டு வருடங்களாக விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் முடிவுக் கட்டத்துக்கு வந்துள்ளது. மக்களின் நீண்டகால கோரிக்கையை மதித்து மாவட்ட நீதிபதி யூட்சன் அப்பகுதியை நேரடியாக பார்த்து கட்டளை வழங்கியுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் யாழ். மாநகரசபை, ஏனைய பிரதேச சபைகள் மலக் கழிவுகளை கொட்ட முடியாது, குப்பை மேட்டை சுற்றி வேலி அமைக்கப்பட வேண்டும், எக்காரணம் கொண்டும் கழிவுகளை எரிக்க முடியாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கட்டளையை மல்லாகம் நீதிவான் நீதிமன்று வரும் 21ஆம் திகதி வழங்கும். இந்த தீர்ப்பை மதிக்க வேண்டிய கடப்பாடு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உண்டு.

மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அப்பகுதியில் மீண்டும் மலக்கழிவுகள் கொட்டப்பட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிமன்றை நாடலாம் என நீதவான் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 8 மாதங்களில இந்த பிரச்சினைக்கு முழுமையான தீர்வை காணலாம். எனவே சுற்றுச்சூழலை பாதித்து, அச்சுறுத்தி வந்த விடயம் தீர்க்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தையை நல்லவராக வளர்ப்பது எப்படி?

உண்மை பேசுவதற்கும் நமது ஆசாரங்களை கடைப்பிடிப்பதற்கும் தர்ம நியாயத்தின்படி நடப்பதற்கும் குழந்தைப் பருவம் முதலே பிள்ளைகளை நாம் பழக்க வேண்டும். உயிர்களைக் கொல்வது பாவம். அன்புடனும் இரக்கக் குணத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். பெரியோர்களை வணங்குதல் வேண்டும். பெற்றோர்-ஆசியரை மதிக்க வேண்டும். அனைவரிடமும் அன்புடன் பழக வேண்டும். தினமும் இறைவனை வணங்குதல் வேண்டும் என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து வளர்த்தோமானால் அந்தப் பழக்கங்கள் அவனை நல்லவனாக மாற்றும். அவன் நல்லவனாவான், மாறுவான் என்பதில் சந்தேகமில்லை.

(தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகநாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் வேலணைச் சந்த சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதே சங்களிலும் மின்தடைப்படும்.(இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இயற்கை உணர்வு (Nature Instinct)



இயற்கை உணர்வானது எல்லா ஜீவராசிகளிடமும் இயல்பாக அமைந்துள்ளது. பிறந்த குழந்தை தன் தாய் மார்பில் கிடத்திக் கொண்டால் பாலை உறிஞ்சிக் குடிக்கக்கூடிய சக்தி பிறப்பிலேயே இயல்பாக இருக்கிறது. பிறந்த மீன் குஞ்சு அடுத்த கணமே நீந்தத் தொடங்கி விடுகிறது. இதெல்லாம் இயல்பாக வருகிறது. அதற்கு "Instinct" என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோம். இந்த "Instinct" என்பதற்கு மேலே "Intelligence" அறிவுக் கூர்மை உண்டாகிறது.

ஒரு பொருளைத் தொட்டால் சுடுகிறது அல்லது ஓரிடத்திலிருந்து கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது என்று பாதுகாப்பாக ஜாக்கிரதையோடு நடந்து கொள்ளும் உணர்வு ஏற்படுகிறது. இதுதான் "Intelligence" என்பது. ஒவ்வொரு அனுபவத்தைக் கொண்டு நாம் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் முயற்சியே அது.

இந்த "Intelligence" வந்த பிறகு தான் "அறிவு", "Knowledge" வந்தது. தன்னுடைய அனுபவத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு வாழத் தொடங்குவது "Intelligence". அதற்கு மேலாகப் பலருடைய அனுபவத்தைத் தன்னுடைய வாழ்வில் கூட்டிக் கொண்டு விரிந்த ஒரு நிலையோடு அறிவை இணைத்துக் கொள்கின்றபோது அதை "அறிவு" "Knowledge" என்று சொல்லலாம்.

இந்த "Collective Knowledge" வந்த பிறகு தான் ஒவ்வொரு பொருளோடும் ஊடுருவி, ஊடுருவி நோக்கவும் தன் னையும் உற்று நோக்கிப் பார்க்கிறபோது தான் "Intuition" உண்டாகிறது. அதில் இருந்து தான் எல்லாம்வல்ல இறையருள் சிறுகச் சிறுக உயர்ந்து இவனுக்கு வேண்டியது எல்லாம் உள்ளுணர்வில் கிடைக்கின்றன. இது உங்களுக்கு இல்லையா? நிச்சயமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் சிறந்தவன் யார் விண்மீன், அண்ணாசிலையடி வெற்றி





சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில், வடமராட்சியின் சிறந்தவன் என்ற தொனிப்பொருளில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

இதில் மொத்தமாக 40 அணிகள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்று, அதிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்கிடையில் லீக் முறையில் ஆட்டங்கள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில் நவிண்டில் கலைமதி ஏ, கரணவாய் கொலின்ஸ், அண்ணா சிலையடி இளைஞர், வதிரி டயமன்ஸ், நவிண்டில் கலைமதி பி, கம்பர்மலை யங்கம் பன்ஸ், பலாலி விண்மீன் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஏ அணி ஆகிய 8 அணிகளும் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

லீக் சுற்றின் போட்டிகள் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகின.

அன்றைய தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் வடமராட்சி அண்ணாசிலையடி அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகி 14 ஆவது நிமிடத்தில் அண்ணாசிலையடி அணியின் எம்.கவியழகன் முதலாவது கோலைப் போட்டார். முதற் பாதியாட்டம் அந்தக் கோலுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தின் இறுதி நிமிடத்தில் அண்ணாசிலையடி எஸ்.சாருஜன் மேலும் ஒரு கோலைப் போட்டார். அதன் பிறகு எந்தக் கோலும் பதிவு செய்யப்படவில்லை. முடிவில், அண்ணாசிலையடி அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. போட்டியின் 12 ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியின் எஸ்.டேமியன் முதல் கோலைப் பதிவு செய்தார்.

15 ஆவது நிமிடத்தில் பலாலி அணியின் பி.உதயதாஸ் அடுத்த கோலைப் பதிவு செய்தார். முதற் பாதியாட்டம் அந்த இரண்டு கோல்களுடன் முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதியாட்டத்தின், 13 ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் அணியின் யு.டினோஜன் ஒரு கோலை அடித்தார். ஆட்டநேரம் முடியும் வரையில் மேலதிக மாற்றங்கள் வராமையால், பலாலி விண்மீன் அணி, 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கௌதமன் – விஜயஸ்காந் சிறப்பாட்டம்; யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணி வெற்றி





பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு பிரிவு 3 துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான 2 நாட்கள் கொண்ட மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட முதல் சுற்று துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

மேற்படி சுற்றுப்போட்டியின் போட்டியொன்று கண்டி நுகேவெல மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி நுகேவெல மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 73 ஓவர்களில் 253 ஓட்டங் களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஶ்ரீஸ்கந்தராசா கௌதமன் 71 ஓட்டங்களையும், விஜயஸ்காந்த் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலளித்தாடிய கண்டி நுகேவெல மத்திய கல்லூரி அணி, 48 ஓவர்களில் 98 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

155 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 11 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்ற போது, ஆட்டத்தை இடைநிறுத்தியது.

243 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய நுகேவெல அணி, 38 ஓவர்களில் 77 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. (க-26)



யாழ்.மாவட்டத்திற்கு நவீனவசதிகளுடன் கூடிய கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் நோக்கில் மல்லாகம் விளையாட்டு மைதானத்தை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தலைவர் வி.மணிவண்ணன் மற்றும் அதிகாரிகள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# ஶ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டம் அரையிறுதியில் கலைமதி, வதிரி டயமன்ஸ், நவஜீவன்ஸ்







கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடி ஶ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம், தமது 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

20 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய, இந்தச் சுற்றுப்போட்டியில் முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றது. முதற் சுற்றிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, இரண்டாம் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெறவுள்ளன.

அந்தவகையில், லீக் சுற்றுக்கு சமரபாகு நியூட்டன், நவிண்டில் கலைமதி, வதிரி டயமன்ஸ், கம்பர்மலை யங்கம்பன்ஸ், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், அல்வாய் மனோகரா மற்றும் கரணவாய் கொலின்ஸ் அணிகள் தகுதி பெற்றிருந்தன.

லீக் சுற்றுப்போட்டிகள் கடந்த 3 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியது. 3 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது லீக் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது. இதில் கலைமதி அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில், கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் மோதின. இதில் வதிரி டயமன்ஸ் அணி, 4:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

4 ஆம் திகதி நடைபெற்ற மூன்றாவது லீக் போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 05:00 என்ற கோல்கள் அடிப்படையில் வென்றது.

அன்றைய தினம் நடைபெற்ற நான்காவது லீக் போட்டியில், கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது.

இதில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால், போட்டி சமநிலையில் முடிவடைந்தது. 5 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாவது லீக் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது. இதில் கலைமதி அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# விராட்கோலி சொதப்பல்; ரசிகர் தற்கொலை முயற்சி

கேப்டவுனில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் கோலி ஏமாற்றியதால், விரக்தியடைந்த ரசிகர் ஒருவர் தீக்குளிக்க முயற்சித்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென் ஆபிரிக்கா அணியின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் இந்திய வீரர்களில் பாண்ட்யாவைத் தவிர மற்ற வீரர்கள் வந்த வேகத்தில் வெளியேறினர்.

இதில் கோலி 5 ஓட்டங்களில் வெளியேறினார்.

இந்நிலையில் மத்திய பிரதேசத்தில் உள்ள 63 வயது முதியவரொருவர் தன் உடலில் பெற்றோலை ஊற்றி தற்கொலை முயற்சிக்கு முயன்றுள்ளார்.

தற்கொலைக்கு முயன்றுள்ள நபர் விராட் கோலியின் தீவிர ரசிகர் எனவும், விராட் கோலி சிறப்பாக விளையாடாத காரணத்தினாலும், இந்திய அணியின் ஆட்டத்தினாலும் விரக்தியடைந்து தற்கொலைக்கு முயன்றுள்ளதாக கூறப்படுகிறது. (க)

# இறுதியாட்டமும் பொதுக்கூட்டமும்

வட்டுக்கோட்டை கற்பகச் சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம் நடத்தும் ஶ்ரீ.நிஷாந்தன் ஞாபகார்த்த 2017 ற்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பொதுக்கூட்டமும் 2018ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று மாலை நடைபெறும். மாலை 3 மணிக்கு துடுப்பாட்ட இறுதிப் போட்டியும் மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நடைபெறும் என வட்டுக்கோட்டை வட கற்பகசோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் ஏற்றிய...

பிரதான மின்வடத்துடன் உராய்ந்ததில் இளைஞன் தூக்கி வீசப்பட்ட நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது இடை நடுவில் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் கிழக்கு பகுதியினை சேர்ந்த பாஸ்கரன் டர்சன் (வயது 19) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

தற்போது பட்டம் விடும் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் உயர்தரத்தில் கல்வி பயலும் இந்த இளைஞன் நேற்று மாலை சக நண்பர்களுடன் இணைந்து பட்டம் ஏற்றியுள்ளார்.

இரவு நேரம் பட்டம் தொடர்ந்து நிற்பதற்காகவும், மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு அதற்கு மின்சார இணைப்பும் வழங்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது.

வீதியில் நின்று ஏற்றிய பட்டத்தினை வயல் தரவைக்குள் எடுத்து செல்ல முற்பட்ட போது பட்டத்தின் வாலில் பொருத்தியிருந்த வயர் வீதியால் சென்ற உயர் மின்அழுத்த பிரதான வடத்தில் உராய்ந்துள்ளது.

சம்பவ இடத்தில் தூக்கி வீசப்பட்ட இளைஞனை சக நண்பர்கள் காப்பாற்றி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போது அவர் இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைக்களை முன்னெடுத்து வருகின்றனர். (ம-9,17,78)

## தனிநபர், நிறுவனங்க...

வாங்க நினைப்பவரின் தலைப்பகுதியையும் இணைத்து பதிவேற்றம் செய்யும் கலாசாரம் இலங்கையில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் யாரேனும் பாதிக்கப்பட்டால் உடனடியாக அறியத்தருமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுகொண்டுள்ளது.

இதன்படி, 0112320141/ 0112320142/ 0112320143/ 0112320144/ 0112320145 அல்லது 0112326979 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு சைபர் பிரிவிற்கு அறிவிக்க முடியும், பதிவேற்றப்பட்ட இடுகைகளை அகற்றி கொள்வதற்காக report@cert.gov.lk நிறுவனத்திற்கு 0112691692 என்ற இலக்கத்திற்கு அறிவிக்க முடியும்.

சமூகவலைத்தளங்களில் ஆபாச புகைப்படங்கள் காணொளிகளை பதிவேற்றம் செய்தல், தகாத வார்த்தைகளால் விமர்சனம் செய்தல், மத ரீதியான கருத்துக்களை தவறான வழியில் பயன்படுத்துதல், விபச்சாரத்திற்கான விளம்பரங்களை மேற்கொள்ளுதல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதேபோன்று, போதைப்பொருள் விற்பனைக்கான தொடர்புகளை அறிவித்தல், தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான எழுத்துரு அல்லது காணொளி பதிவேற்றங்கள் மேற்கொள்ளல் உள்ளிட்ட முதன்மை குற்றங்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் அவர்களின் குடும்ப பின்னணி தொடர்பிலும் ஊடகங்களில் பகிரங்கமாக பொது விளம்பரம் செய்யப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## கசிப்பு கடத்திய...

தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸ் அணியினர் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இராமநாதபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட கசிப்பு 20 லீற்றரையும் அதனைக் கடத்திச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப் பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதனைக் கொண்டு சென்ற 02 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும்,

அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## ஊடகங்களை...

தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புச் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான பரப்புரைக் கூட்டம் நேறறு மாலை நாவாந்துறை ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையில் இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏக்கிய இராஜிய, என்ற சிங்களச் சொல் ஒற்றையாட்சி என்ற அர்த்தமில்லை. அது ஒருமித்த நாடு என்பதைக் குறிக்கின்றது என்ற விளக்கத்தை பலமுறை தெளிவுபடுத்திய போதும் ஊடகங்கள் பொய்யாக கருத்தையே வெளியிட்டு வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (ம-9)

## தமிழரின் போராட்டம்...

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில கிடாச்சூரி வட்டாரத்தில் போட்டியிடும் அ.அருந்தவராசாவை ஆதரித்து இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் தமது உடைமைகள் உறவுகளை இழந்திருக்கின்றனர் என்று தெரிவித்த அவர், சுமந்திரன் என்ற நபருக்கு வடக்கு கிழக்கை பற்றி, போராட்டத்தை பற்றி, அதன் வலிகளைப்பற்றி என்ன தெரியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் பிறந்து வளர்ந்து, கொழும்பில் படித்து, கொழும்பில் உத்தியோகம் பார்த்த ஒருவருக்கு இந்த வலிகள் புரியுமா? என்பதனை நீங்கள் எண்ணிப்பாருங்கள் என்று மக்களை நோக்கி கூறிய அவர், அதன் காரணமாகத்தான் சுமந்திரனின் செயற்பாடுகள் தமிழர்களுக்கு விரோதமாக இருக்கின்றது என்றார்.

இதுகுறித்து மேலும் அவர் குறிப்பிடுகையில், இடைக்கால அறிக்கையில் நாம் அரைவாசி தூரம் போய்விட்டோம் என்றும், மிகுதி அரைவாசித்தூரம் போகவேண்டுமாக இருந்தால் நீங்கள் எங்களுக்கு ஆணை தர வேண்டும் என்றும் சுமந்திரன் கூறுகின்றார். அது இல்லாத ஒன்றுக்கான ஆணை. இடைக்கால அறிக்கை என்பது தமிழ் மக்களை குழிதோண்டி புதைக்கக்கூடிய விடயம் என்பதை புரிந்துகொண்டு அதற்கு ஆணை கேட்கின்றார். நீங்கள் வீட்டிற்கு போடும் புள்ளடியென்பது நாங்கள் எங்களை குழிதோண்டிப் புதைப்பதற்கான ஆணையென்பதேயாகும்.

தந்தை செல்வாவின் சின்னம் வீடாக இருக்கலாம். தமிழர் விடுதலைக்கூட்டணி வந்ததன் பின்னர் உதய சூரியனாக இருக்கலாம். அது சில காலம் முடக்கப்பட்டதனால் மீண்டும் வீட்டிற்கு போகலாம். ஆனால் நாம் இங்கு பார்க்க வேண்டியது கொள்கை ரீதியாக எமது தீர்வை படிப்படியாகவேனும் பெற்றுக்கொள்ள போகின்றோமா இல்லையேல் எங்களை ஒட்டுமொத்தமாக விலைபேசி விற்கப்போகின்றோமா என்பதையே ஆகும் என்றார் அவர். (ம)

# உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தல்களை முன்னிட்டு எதிர்வரும் மூன்று மாத காலங்களுக்கு நாடளாவிய ரீதியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும்படி பொலிஸ்மா அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாடளாவிய ரீதியாக சட்டவிரோத ஆயுதங்களை தேடுவதற்கும் விசேட பொலிஸ் துறை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொலிஸ்மா அதிபர், சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்

இந்த காலப்பகுதியினுள் குற்றவாளிகளை இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தும் பொலிஸ் அதிகாரிகளுக்கு, பொலிஸ்துறை நலன்புரி நிதியில் இருந்து விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்

இதேவேளை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் அச்சுறுத்தல் ஆகிய தேர்தல் சட்டங்களை மீறிய 54 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 8 வேட்பாளர்களும் உள்ளடங்குகின்றனர் என கூறினார். (ம)

# பிணைமுறி மோசடி தொடர்பில் ரணில் பதவி விலகத் தேவையில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து மத்திய வங்கி முறி மோசடி தொடர்பில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், பிரதமர் நியமனம் செய்தவர் திருடினார் என்பதற்காக பிரதமரைக் குற்றம் பிடிக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

பிரதமர் நியமித்தவர் திருடினார் என்பதற்கு பிரதமர் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளார் தான். அதற்காக பிரதமர் அவருடன் சேர்ந்து திருடினார் என ஆகிவிடாது. இவ்வாறிருக்கையில், பிரதமர் ஏன் பதவி விலக வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இது போன்ற எந்தவொரு விசாரணையும் இடம்பெறவுமில்லை. குற்றவாளிகள் கண்டறியப்படவுமில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# தேர்தலில் கூட்டமைப்பில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்கள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் முஸ்லிம் பிரதிநிதிகளை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்.ஒஸ்மானிய கல்லூரி வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான, எம்.ஏ. சுமந்திரன், சீ.வீ.கே. சிவஞானம், ஜெயசேகரம் மற்றும் அ.அஸ்மின் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர். (ம-9)

## மாவீரர்களை பயன்...

கிளிநொச்சியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது வேட்புமனுதாக்கல் நிராகரிக்கப்பட்ட முன்னாள் போராளியான வ.அன்னலட்சுமி தலைமையிலான சுயேட்சைக் குழு நேற்றுமுன்தினம் ஊடகசந்திப்பு ஒன்றை கிளிநொச்சியில் நடத்தியது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் போராளியான வ.அன்னலட்சுமி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தார்.

அத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்த எந்தவொரு அரசியல் தலைவர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## தேர்தலுக்கு தடை...

பொலிஸ்மா அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மகிந்த தேசப்பிரிய இதனை தெரிவித்தார்.

தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்து செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றால், வாக்காளர் அனுமதி அட்டை விநியோகம் மற்றும் தபால் மூல வாக்களிப்பு என்பன தடைப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார். (ம)

## தேர்தல் தொடர்பில்...

இதுவரை தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 114 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## பிணை முறி தொடர்பான...

இது தொடர்பாக பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்காக சபாநாயகருக்கு அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்று காலை நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களைக் கூறினார்.

2008 தொடக்கம் 2015ம் ஆண்டு காலப் பகுதியில், இடம்பெற்ற பிணைமுறி ஏலவிற்பனை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று பிணைமுறி தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவித்த பிரதமர்,

எதிர்வரும் தசாப்தங்களுக்கு வருமானம், தொழில்வாய்ப்பு மற்றும் வீடில்லாப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுத்து நாட்டின் இளம் சமூகத்தினரின் எதிர்காலத்தை உறுதியாக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய எதிர்பார்ப்பு என்றும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரில்...

அப்போது அவர்களை மறித்த வாள்வெட்டு குழுவினர், அவர்களை தாக்கியதுடன்வாளால்வெட்டிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

நல்லூரை சேர்ந்த அ.பகீரதன் (வயது 28) என்பவர் தலையில படுகாயம்அடைந்துள்ளதுடன் கந்தர்மடத்தை சேர்ந்த தி. கௌசியன் (வயது 21) என்பவர் கையில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் ப்பட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பில் யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அப் பகுதியில் பல மணிநேரமாக பொலிஸார் தேடுதல் நடத்தியிருந்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் யாரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)


## பொருளியல் A/L DAY

DMI 8.00 - 10.00 மணி வரை

திங்கள் முதல் வெள்ளி வரை (C-1152)

2020 A/L சனி, ஞாயிறு 9.00-10.00 மணி S.S.சிறி

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும் (2320)

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆலயிரவர் புத்தகசாலை அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
16, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி,
மன்னார்.

077 755 4528 3-5 Working Days

DHL aramex SKYNET

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் எம்மிடம் மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். புறொய்லர் சுத்தம் செய்யப்பட்டது. (2321)

U.S.A பாம் 1 Kg 450/= மட்டும்

T.P 0778689500 குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## 2018ஆம் ஆண்டிற்கான நிரந்தரமான வேலைவாய்ப்பு

O/L & A/L இன் பின்னர் நிரந்தர வருமானத்துடன் தொழில் தேடுபவரா?



- முதல் 3 மாதம் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
- பயிற்சியின் பின்னர் உங்கள் நகரங்களில் ஆரம்பிக்கவுள்ள எமது கிளைகளில் நிரந்தர தொழில் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது மாதாந்த வருமானம் 20000/-, பயிற்சியின் பின் 55000/- மேல்



தங்குமிடம், உணவு, மருத்துவம் இலவசம் ஆண்/ பெண் இருபாலாருக்கும்

குறிப்பு: இந்த வாய்ப்பு முதல் 20 பேருக்கு மாத்திரமே (2307)

தொடர்புகளுக்கு :- 0766668385, 0774395501

## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-1120)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

A/L தொழில்நுட்பப்பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

## Techno World

முதன் முறையாக A/L தொழில் நுட்பப்பிரிவு பெறுபேறுகளில் தேசிய நிலையிலும் மாவட்ட நிலையிலும் இலங்கையில் அதிகளவான பெறுபேறுகளைப் பெற்ற பெருமையுடன் (C-1155)

(வெலிங்டன் சந்தி லிங்கன் கூல்பார் அருகாமை-யாழ்)

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன


அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புக்கு:0770175346

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 11.12.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் சுப்பிரமணியம் பரமநாதன்



அவர்கள் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் இருந்த போது அவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கும் அவரை பராமரித்த தாதிமார் மற்றும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவியாளர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் மற்றும் உதவி அளித்தவர்களுக்கும் தொலைபேசி மூலமும் தபால் மூலமும் முகப்புத்தகம் மூலமும் அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் மலர் வளையம் வைத்தும் மலர்மாலை சூட்டியும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைகளின் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரது பொதுச் சேவையை நினைவு கூர்ந்து பத்திரிகையில் எழுதிய எழுத்தாளர்களுக்கும் அவருக்கு அஞ்சலிக்கூட்டத்தை ஒழுங்கமைத்த அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், யாழ் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடமாகாண அமையம் மற்றும் அஞ்சலி உரை வழங்கிய அனைத்து பெரியாருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு 10.01.2018 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(2316)

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

42 பலாலி வீதி, உரும்பிராய். 021 223 0909 - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி அமிர்தலிங்கம்

தோற்றம் 1951 - 12 - 15



மறைவு 2018 - 01 - 01

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு வாய்க்காற்தரவை பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த 01.01.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-மகேஷ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தசாமி அமிர்தலிங்கம் (நகைத்தொழில்) அவர்களின் பாசமிகு மனைவியும், தாட்சாயினி (ஆசிரியர் யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி), கஜேந்திரன் (அதிபர்-கிளி/கிளாலி றோ.க.த.க பாடசாலை), அமரர் சிவாஜினி, மோகனரூபினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவிக்குமார் (சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி லங்கா லோக ஹாட்வெயார் லிமிற்றட்), உமேஷ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கேசினி, யஸ்விதா, கேஷிகன், நேகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 04.01.2018 வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1154)

நீர்வேலி வடக்கு, வாய்காற்தரவைப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி

தகவல் : குடும்பத்தினர் 0776450333, 0774933882

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org